கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 7

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை 3
ஜக்கு - ஊர் திரும்புகிறுன் – 'ஆர்வி' .. 4
எட்டிப் பழத்தின் கடிதங்கள் - பிச்சுமணி .. 11
கண் கண்ட தெய்வம் - 'ஸேனு' 13
ரூபகுமாரன் - 'அநசூயா' 17
மயிலும் குயிலும் - 'சோமசன்மா' 25
எழுத்திலே படங்கள் - 'மூட்டை' 30
வந்துவிட்டார்கள் - 'வாசகன்' 31
குழந்தை திருடன் – 'ராசு' 34
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 38
பவழவல்லி - கி. ரா. 41
பொம்மையின் கல்யாணம் - 'சூடாமணி' .. 46
அட்டைத் துப்பா கி - நடராஜன் 4
கக்கூ விளையாட்டு - 'சுண்டு' 4
மௌலானு ஆஸாத் – கி. வா. ஜகந்நாதன் .. 5
முயல் - தி. ஜ. ர. 5
எதற்கு இது உண்டு? – வி. ஜி. ஸ்ரீநிவாஸன் 6
கண்ணன் தபால் .. ..

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்க

குழந்தைகளே!

விடுமுறை நாட்களைச் சுகமாகத்தானே கழித்தீர்கள்? எனக்குத் தெரியும், ரொம்ப ஜோராகக் கழித்திருப்பீர்கள் என்று. போதும் போதாததற்கு ஒழிந்த நேரங்களில் யோசித்து எழுதுவதற்கு உங்களுக்குக் காமிராப் பரிசுப் போட்டிக் கதை வேறு அகப்பட்டது!

அப்பப்பா! தினம் தினம் தபால்காரனைப்பற்றிய கதைகள் வந்து குவிந்தவண்ணமாகவே இருக்கின்றன. எல்லாக் கதைகளையும் எப்படித்தான் படிக்கப் போகிறேனோ என்று மலைப்பாய் இருக்கிறது! யாருக்கு அதிருஷ்டம் அடிக்கப் போகிறதோ என்று தெரிந்துகொள்ள இப்பொழுதே எனக்கு ஆசையாக இருக்கிறது. உங்களுக்கும் முடிவு தெரிய எவ்வளவு ஆவலாய் இருக்கும் என்பதையும் நான் அறிவேன். இருக்கட்டும்; எப்படியும் அடுத்த இதழில் முடிவு தன்னால் தெரிந்துவிட்டுப் போகிறது. அதற்குள் அவசரப்படுவானேன்?

உங்களையெல்லாம் சந்திப்பதற்கு, முன்பு தெரிவித்ததுபோல் எனக்கு ஆசையாக இருக்கிறது. எப்படியும் கூடிய சீக்கிரம் உங்களைச் சந்திக்கத்தான் போகிறேன். அடிக்கடி சந்தித்து நேரிடையாகத் தெரிந்துகொள்ளத்தான் போகிறோம். சென்னையில் உள்ள கண்ணன் கழக அங்கத்தினர்களை இந்த மாதக் கடைசியில் சந்திப்பேன். அவர்களுக்கு அழைப்பு, தயாராகிக் கொண்டிருக்கிறது. எதனால் எதிர்பார்த்ததற்குமேல் தாமதம் ஆகிறது என்றால், இன்னமும் அங்கத்தினர் ஜாபிதா பெருகிக் கொண்டே போவதால்தான் அதனாலேயே கண்ணன் கழகப் பதக்கம் அனுப்பவும் சிறிது தடையாய் இருக்கிறது. எப்படியும் இதுவரையில் சேர்ந்தவர்களுடைய பெயரைப் பதிவு செய்துகொண்டு உடனேயே பதக்கமும் அனுப்பப் போகிறேன். இரண்டாயிரம் அங்கத்தினர்கள் பெயர்களைப் பிரசுரிக்க வேண்டியிருப்பதால் இந்த மாதம் ஒரு பக்கம் அதிகமாக வெளியிட்டிருக்கிறேன். அவசியமானால் அடுத்த மாதம் இன்னொரு பக்கமும் சேர்த்துக்கொள்கிறேன். கொஞ்சம் பொறுத்துக்கொள்வது உங்களுக்கு ஒரு பிரமாதமா?

கண்ணன் பத்திரிகையில் எந்த அம்சங்கள் உங்களுக்குப் பிடித்தவை என்று கேட்டிருந்தேன். பலர் எழுதியும் இருக்கிறீர்கள். அதையெல்லாம் பரிசீலித்து ஒரு திட்டம் ஒரு பக்கத்துக்குத் தயாராகி வருகிறது. பாருங்களேன், கண்ணன் இன்னும் பிரமாதமாயும் அற்புதமாயும் விளங்கப் போகிறான்! அருமையான புதுத் தொடர்கதை ஒன்றை ஆரம்பிக்கவும் யோசித்து வருகிறேன். கார்ட்டூன்கள் என்றால் உங்களுக்குப் பிடிக்குமோ? பிடித்தால் சொல்லுங்கள்!

ஒரே ஒரு புதிய செய்தி. ரொம்ப மகிழ்ச்சியான செய்தி! கண்ணன் வெளியீடாகப் புதுப் புதுப் புத்தகங்களை வெளியிடப் போகிறேன். ஒவ்வொரு புத்தகமும் அற்புதமாய், அபாரமாய் இருக்கும்! முதல் புத்தகம்கூட வெளிவந்துவிட்டது. உங்கள் திருப்தியே என்னுடைய லட்சியம்! கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு மட்டும் விலையில் சகாயம் உண்டு என்பதைச் சொல்லவா வேண்டும்?

—ஆசிரியர்

தீராத விளையாட்டுப் பிள்ளை

அங்காந் திருக்கும்வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
எங்காகிலும் பார்த்த துண்டோ? - கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ?

—பாரதியார்.

ஜக்கு

'ஆர்வி'

ஊர் திரும்புகிறான்...

ஜக்குவின் பெயர் ஒரே நாளில் பையன்களிடையே பிரபலமாகிவிட்டது. தெருவில் போய்விட்டால் போதும். ஒரே அட்டகாசம்!

"அடே, இவன்தாண்டா புது ஹெட்மாஸ்டராக ஆக்ட் பண்ணினவன்!" என்பான் ஒருவன்.

"டிக்கட்கூட இல்லாமல் எங்களை உள்ளே விட்டாண்டா" என்பான் இன்னொருவன்.

"இந்தப் பையனுடா அவ்வளவு ஜோராய் நடிச்சது?" என்று கேட்பான் வேறு ஒருவன்.

"இந்தப் பையன் இல்லேடா, இவனுக்குள்ளே வேறோர் ஆள் இருக்காண்டா!" என்பான் மற்றொருவன்.

இப்படி எல்லாரும் ஜக்குவைப்பற்றிப் புகழ்ச்சியாகவே பேசினார்கள். நந்து இதைப் பார்த்துவிட்டு ஜக்குவிடம் வந்து, "எய், ஊரில் ஒருவர் பாக்கியில்லாமல் உன்னைப் பிரமாதமாய்ப் பேசுகிறார்களடா!" என்றான்.

"தப்பு, தப்பு! நான் இதை நம்பவே மாட்டேன்" என்றான், ஜக்கு, படுக்கை, பை முதலியவைகளைக் கட்டி வைத்துக் கொண்டே.

"பின்னே நான் பொய்யா சொல்கிறேன்?" என்றான் நந்து.

"பொய் இல்லை; தப்பாகச் சொல்கிறாய் என்கிறேன்!"

"சரி; அப்போ என் கூட வருகிறாயா, ரைட்டா, தப்பா பார்த்துவிடலாமா?"

"ஓ! நான் ரெடி! ஆனால் நான் சொல்லுகிறவர்களிடம் தான்முதலில் போகவேண்டும்."

"யாரிடம்? அதையாவது சொல்!"

"முதலில் 'உல்பி'டமும் சோனிக் கபாலியிடமும் போகலாமா?"

இதை ஜக்கு சொன்னது தான் தாமதம். இருவருமே விழுந்து விழுந்து சிரித்தார்கள். 'உல்பு'ம் சோனியும் டிராமாவுக்குப் பிறகு வெளியில் தலையைக் காட்டவேயில்லை!

"நந்து, இன்னிக்கு ராத்திரி வண்டிக்கு ஊருக்குப் போகப் போகிறேன். அதற்குள் எனக்கு ஒரே ஒரு வேலைமட்டும் இந்த ஊரில் பாக்கியிருக்கிறது. நான் என்ன பிளான் போட்டிருக்கிறேன், தெரியுமா?"

"என்ன?"

"கேள், சொல்கிறேன். இன்னிக்கு என் ஜாகை மறுபடி மாடிக்குப் போவதுதான்!"

"ஆமாண்டா, அந்த டெவில் போன் ஆசாமியை எப்படிடா கண்டுபிடிக்கிறது? பொம்மையை எப்படிடா எடுத்துண்டு போறது?" என்றான் நந்து.

"எல்லாம் நான் பாத்துக்கறேன். ஆனால் நீ மட்டும்

ஒரு காரியம் செய்யவேண்டும். தயங்காமல் செய்வியோ?''

''என்னடா என்னைப் பார்த்து இப்படிக் கேட்கறே? நானுடா உன் விஷயத்தில் தயங்கு கிறவன்?''

''சேசே, அதுக்குச் சொல் லல்லேடா. இது அப்படித் தயங்க வேண்டிய விஷயம்! நீ போய்விட்டுச் சரியாக ஒன் பதரை மணிக்கு, மாமா ஆபீ சுக்குக் கிளம்புகிற சமயத் துக்கு இங்கே வரவேண்டும். அவ்வளவுதான்!'' என்றான் ஜக்கு.

'சரி; இவ்வளவுதானே' என்று எண்ணிக்கொண்டு நந்து வீட்டுக்குச் சென்றான்.

சரியாக ஒன்பதரை மணிக் கெல்லாம் நந்து வீட்டுக்குள் நுழைந்தான். ஜக்குவின் மாமா சாப்பிட்டுவிட்டு ஆபீசுக் குக் கிளம்பிக் கொண்டிருந் தார்.

மாடியிலிருந்து ஜக்கு ஓடோடியும் வந்தான். நந்துவே திடுக்கிட்டுப் போகும்படி ஆக் ரோஷத்துடன், ''அட திருட் டுப் பயலே! ரொம்ப நல்லவன் மாதிரி வேஷம் போட்டா யேடா, பயலே! உன் வேலையை இந்த ஜக்குவிடமா காட்டு கிருய்? அசல் காவேரித் தண்

ணீர் குடிக்கிற வண்டா! உன்னைப் போல் குழாய்த் தண்ணீர் குடிக்கிறவன் இல்லே!'' என்று சொல்லிவிட்டு நந்துவின் மேல் பாய்ந்தான். நந்து திமிறினன். ஜக்கு பிடியை விடுகிற வழியாய் இல்லை. அவன் முன் தலைமயிரைக் கெட்டியாக ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்றொரு கையால் திமிற முடியாதபடி அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். மாமா அவர்களை விலக்குவதற்குள் இவ்வளவும் நடந்து விட்டது.

மாமா விலக்கி விட்டபின், “இப்படி நீங்கள் சிநேகமாய் இருந்து விட்டுச் சண்டை போடலாமா?'' என்றார்.

“இல்லே, மாமா, 'சரியாக ஒன்பதரை மணிக்கு வாடா' என்றான், மாமா. வந்ததும் வராததுமாய்ச் சண்டைக்கு வந்து விட்டான், மாமா'' என்றான் நந்து.



ஜக்கு ஒன்றுமே பேசவில்லை.

வெகு நேரங் கழித்து டெலிபோன் மணி கிணுகிணுத்தது. ஜக்கு இதை எதிர்பார்த்தவன் போலவே டக்கென்று ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

“ஹலோ! ஜக்குவா?''

“ஆமாம், ஜகந்நாத்.''

“எப்படி இருக்கிறது உனக்கு உடம்பு?''

“ரொம்ப நன்றாகத்தான் இருக்கிறது. உங்களுக்கு - ?''

"ரொம்பத் தைரியம் வந்து விட்டதோ! இன்றைக்குள் என்னை யாரென்று கண்டு பிடிக்கப் போகிறுயாமே!"

"பாதி கண்டு பிடித்து விட்டேனே!"

"ஓ ஹோ! அவ்வளவுக்கு வந்துவிட்டாயா? சரி; நந்துவோடு இன்றைக்குச் சண்டைக்குப் போனுயா?"

"இல்லையே!"

"உண்மையில் நீ அவனோடு சண்டை போடவில்லை?"

"உண்மையில் போடவில்லை."

"நீயும் அவனும் சண்டை போட்டுக் கொண்டு இப்பொழுது ஒருவரோடு ஒருவர் பேசுவதில்லை என்று நான் சொல்கிறேன்."

"சொல்லுங்களேன்! நான் இல்லை என்கிறேன்."

"என்னிடம் பொய் சொல்லுகிறுயா?" என்று மிரட்டியது அந்தக் குரல்.

ஜக்கு திரும்பினன். கதவருகில் நந்து நின்றுகொண் டிருந்தான். கையால் சைகை காட்டி, அவன் அருகில் வந்ததும் ரிஸீவரைக் கையில் கொடுத்தான்.

"ஹல்லோ! நான்தான் நந்து - நந்து பேசறேன்."

"யாரு? நந்துவா?"

"ஆமாம்; என்ன ஆச்சரியமாய் இருக்கோ?"

"உனக்கும் ஜக்குவுக்கும் சற்று முன்பு பலத்த சண்டை நடக்கவில்லை?"

"நான்கூட முதல்லே அப்படித்தான் நிஜச் சண்டையாக்கும் என்று நினேச்சேன். அப்புறம்தான் விஷயம் புரிஞ்சுது. ஜக்கு அவன் மாமா போனப்புறம் வந்து வயிறு வெடிக்கச் சிரித்தான். எனக்கே வெட்கமாகப் போயிடுத்து. 'இப்போ பாருடா, இன்னும் சற்றைக்கெல்லாம் எனக்கு டெலிபோன் வரப்போகிறது. வாயேன் ஒரு வேடிக்கை!' என்று என்னை இங்கே ஜக்கு அழைச்சிண்டு வந்தான். உடனே நீங்களும் டெலிபோன் பண்ணிவிட்டீர்கள்! ஜக்குவின் ஜோஸ்யம் அப்படியே பலிச்சுட்டுதே!" என்றுன்.

அந்தப் பக்கத்தில் 'டக்' கென்று ரிஸீவரைக் கீழே வைத்த ஓசை கேட்டது. நந்து, "ஹலோ, ஹல்லோ" என்று கூப்பிட்டுப் பார்த்தான். பதிலே இல்லை. ஜக்கு சிரித்தான்.

நந்துவுக்கு எல்லாம் அதிசயமாய் இருந்தது. "சரியடா ஜக்கு, இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிஞ்சுது? அந்தப் பக்கத்தில் இப்படிப் பேசுவது யார் என்று கண்டு பிடிச்சுவிட்டாயா? சொல்லேன்; என் என்னிடம் அப்படி நிஜம் போலச் சண்டை போட்டாய்?" என்று படபடவென்று கேட்டான்.

ஜக்குவின் சாமர்த்தியமும் புத்திக் கூர்மையும் அவனே மேலும் பிரமிக்க வைத்தன. ஜக்குவோ அலட்சியமாக, "டேய், எவ்வளவு சுலபமான விஷயம் இது? இதைக் கண்டு பிடிப்பது என்னடா ஒரு பிரமாதம்?" என்றுன்.

"அப்படியானல் இவ்வளவு நாளும் கண்டுபிடிக்கிறதுக்கு

என்ன? பயந்து பயந்து ஓடி னயே!'' என்றான் நந்து.

''அதுதான், அவ்வளவுக்கு எனக்குப் புத்தி எட்டவில்லே. யோசனை பண்ணிப் பார்த்த பிறகுதான் தெரிந்தது. முதல்லே டெலிபோன் வந்த போது யாருமே நிதானம் தவறித்தானே போவார்கள்?''

''எனக்கு என்னமோப்பா இன்னமும் புரியவேயில்லே'' என்றான் நந்து.

''எல்லாம் ராத்திரி ஸ்டேஷனுக்கு வாயேன், புரியச் சொல்றேன்'' என்றான் ஜக்கு.

''ஆமாம், பொம்மை-?''

''எல்லாம் ஸ்டேஷனுக்குத் தன்னாலே வரும், பாரேன்.''

இரவு மணி எட்டு. எழும்பூர் ஸ்டேஷன் 'ஜே ஜே' என்று இருந்தது. டியூப் விளக்குகள் பிரகாசமாய் எரிந்தன. இந்தோ சிலோன் போட்மெயில் ரொம்பவும் கம்பீரமாக முதல் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தது. ஜக்கு பீல்டு மார்ஷல் போல ஒரு தொப்பியை அணிந்துகொண்டு 'செகண்டு கிளாஸ் கம்பார்ட்மென்'டில் உட்கார்ந்திருந்தான். நந்து கீழே பேசிக்கொண்டு நின்றான். வண்டி புறப்பட இன்னும் கால் மணிக்கு மேல் இருந்தது.

'ணங்' என்று வண்டிகள் சிறிது அசைந்து நின்றன. எஞ்சின் பூட்டியாயிற்று!

நந்துவுக்கு வருத்தம் இவ்வளவு அவ்வளவு என்று இல்லே! பல தடவைகள் ரகசியமாகக் கண்ணைத் துடைத்துக்கொண்டு வந்தான். ஜக்குவுக்கு மட்டும் வருத்தம் இல்லையா?

''வருகிற வருஷம் இங்கேயே வந்துடுவேண்டா!'' என்றான்.

''ம்'' என்று அதைக் கேட்டுக்கொண்டான் நந்து. இருந்தும் அவனுக்கு ஆறுதலாகவே இல்லே. இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன.

''இதோ இருக்காண்டா, ஜக்கு!'' என்று குரல் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். உல்பும் சோனியும் தான்! உல்பின் கையில் ஒரு பெரிய பாக்கெட் இருந்தது.

ஜக்கு, 'ஹய்' என்று கோஷமிட்டுக்கொண்டே கீழே இறங்கி வந்து அவர்களோடு கை குலுக்கினான்.

''எங்களை மன்னிச்சுடு, ஜக்கு! உன்னுடைய கெட்டிக்காரத்தனத்தையும் சிநேகத்தையும் நாங்கள் அலட்சியமாய் நினைச்சுட்டோம். இப்பத்தான் கேள்விப்பட்டோம், நீ அடுத்த வருஷம் இங்கேயே படிக்க வரப்போகிறயாமே! எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருந்தது தெரியுமா?'' என்று மனமுருகப் பேசினான் உல்ப்.

ஜக்கு பெருந்தன்மையுடன், ''நான்தான் நியாயமாய்ப் பார்த்தால் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஸ்விம்மிங் பூலிலும் டிராமாவிலும் உங்களுக்கு ரொம்பக் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன். போனதெல்லாம் போகட்டும். நாம் இப்பவாவது சந்திச்சு மனம்விட்டுப் பேசிக்கொண்டு பிரிகிறோமே! இதை விட வேறென்ன ஆனந்தம் வேண்டும்?'' என்றான்.

நந்துவோ உல்பின் கையி லிருந்த பெரிய பாக்கெட்டைப் பார்த்துக்கொண்டே இருந் தான். அதில்தான் அந்தப் பொம்மை இருக்கவேண்டும்! அப்படியானல் உல்புதாஞ அந்த டெலிபோன் ஆசாமி! 'அட, இந்தப் பயலுடைய வேலேதாஞ இதுவும்?' என்று தோன்றிற்று அவனுக்கு.

இந்தச் சமயத்தில் ஜக்குவின் தோளில் இரண்டு முரட்டுக் கைகள் வந்து அமர்ந்தன. ஜக்கு மெல்லத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பழைய எஞ்சின் டிரைவர்!

"ஹல்லோ!" என்று திரும்பி அவனிடம் தாவிக் கைகளைப் பற்றிக்கொண்டான்.

"ஹல்லோ பச்சா!" என்ருன் டிரைவர் சிரித்துக்கொண்டே. பிறகு, "டிக்கட் கிக்கட் வாங் யிருக்கியா? இல்லாட்டி அந் தப் பழைய பாலத்துக்கிட் டேயே உன்னே இறக்கிவிட்டுப் போயிடட்டுமா?" என்ருன்.

"இதோ ஸீட் ரிஸர்வ் பண்ணியிருக்கேன்!" என்ருன் ஜக்கு. அதற்குப் பிறகு டிரை வரிடம், "இவர்களெல்லாம் என்னுடைய 'பிரண்ட்ஸ்.' இதோ, இப்போ என் மாமா வரப்போகிருர்! இந்தப் பொம் மையைக் கூட முன்னடி கொடுத்தனுப்பி யிருக்கிருர். அவரே கொண்டு வரலாமா?" என்று சொல்லிக்கொண்டே உல்பின் கையிலிருந்து அந்தப் பாக்கெட்டை வாங்கி அந்தப் பொம்மையைப் பிரித்துக் காட் டினன்.

"வா, அடுத்த ஜங்ஷன்லே பார்க்கிறேன் உன்னே!" என்று விடை பெற்றுக்கொண்டு போனன் டிரைவர். நாழிகை யாகிவிட்டதே! நந்துவுக்கு இப்பொழுதுதான் இன்னும் வியப்பாய் இருந்தது. உல்பின் வேலே என்று நினைத்தது பிச காகிவிட்டதே! 'அவன் மாமா செய்த வேலேயா?' என்று எண்ணி ஆச்சரியப்பட்டான்.

இரண்டே நிமிஷங்கள்!

மாமா அவசர அவசரமாய்ப் பிளாட்பாரத்தில் நுழைந்து வந்தார். ஜக்குவைக் கண்டு, "அடேய், எண்டா கீழே நிற் ருகிய்? போய் இடத்தில் உட்கார்ந்துகொள்" என்ருர்.

"ரொம்ப தாங்க்ஸ், மாமா!" என்ருன் ஜக்கு, தன் இடத்தில் உட்கார்ந்துகொண்டதும்.

"எதுக்குடா தாங்க்ஸ்?"

"பொம்மையை ஜாக்கிரதை யாய் வைத்திருந்து கொடுத்த துக்கும் அப்புறம் எல்லாத்துக் கும்தான்" என்ருன் ஜக்கு.

"போக்கிரி! எப்படிடா தெரிஞ்சுகொண்டாய்?" என் ருர் அவர் சிரித்தபடி.

"நந்துவோடே நிஜமாகச் சண்டை போடுவது போலப் போடாமல் இருந்தால் மாமி எங்கிட்டே உண்மையைச் சொல்லி யிருப்பாளா?" என் ருன் ஜக்கு.

"அட போக்கிரி!" என்று மட்டுமே அவர் கூறினர். அதற் குள், 'புஸ்' என்றது எஞ்சின். எல்லாரும் கண்ணில் ஜலம் கசிய உற்சாகமாகக் கை வீசி அவனே வழியனுப்பினர்கள்.

எட்டிப்பழத்தின் கடிதங்கள்

பிச்சுமணி

18-12-'49

'எள்ளுருண்டை,
எட்டிப்பட்டி,
மதுரை ஜில்லா.

'எருக்கம் பூ' ஆசிரியர் அவர்களுக்கு, எழுத்தாளர் 'எட்டிப்பழம்' எழுதுவது என்னவென்றால், நான் தங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காகப் பாயஸம் என்ற ஹாஸ்யக் கட்டுரை ஒன்றைச் சென்ற மாதம் அனுப்பினேனே. அதை ஏன் பிரசுரிக்கவில்லை? அடுத்த இதழிலாவது பிரசுரிக்க வேண்டுகிறேன்.

எழுத்தாளர், 'எட்டிப் பழம்'.

* * *

25-12-'49

'எருக்கம் பூ' ஆபீஸ்,
சென்னை, 18.

எழுத்தாளர் எட்டிப்பழம் அவர்களுக்கு எருக்கம் பூ ஆசிரியர் எழுதுவது: தாங்கள் அனுப்பிய 'பாயஸம்' கிடைத்தது. ஹோட்டல் பாயஸத்திலாவது சுவையைக் கண்டுபிடிக்கலாம். உங்கள் கட்டுரையில் சுவையே இல்லையே! ஆகவே, தாங்கள் சுவை மிகுந்த கதைகளாக எழுதி அனுப்பவேண்டுகிறேன். ஸ்டாம்பு வைத்தால்தான் திருப்பி அனுப்பப்படும் என்று தங்களுக்கு நான் சொல்லவேண்டியதில்லை.



ஆசிரியர், 'எருக்கம் பூ'

* * *

2-1-'50

எட்டிப்பட்டி,
மதுரை ஜில்லா.

'எருக்கம் பூ' ஆசிரியர் அவர்களுக்கு: இப்பொழுது, 'மிளகாய்ச் சட்னி' என்று ஒரு ஹாஸ்ய நாடகம் எழுதி அனுப்பியிருக்கிறேன். இதை யாவது கட்டாயம் பிரசுரிக்கவும்.

எழுத்தாளர், 'எட்டிப் பழம்'.

* * *

9-1-'50

'எருக்கம் பூ' ஆபீஸ்,
சென்னை, 18.

ஐயா, எட்டிப்பழம்! தாங்கள் அனுப்பிய 'மிளகாய்ச் சட்னி' மிகவும் சப்பென்று இருக்கிறது. ஆகவே, விறு

விறுப்பான நாடகங்களாக எழுதி அனுப்பவேண்டும்.

ஆசிரியர், 'எருக்கம் பூ'.

* * *

13-1-'50

எட்டிப்பட்டி,
மதுரை ஜில்லா.

'எருக்கம் பூ' ஆசிரியர் அவர்களுக்கு, இப்பொழுது 'பலீன் சடு குடு' என்று ஒரு கதை எழுதி அனுப்பியிருக்கிறேன். இது கட்டாயம் தங்கள் பத்திரிகையில் பிரசுரமாகும் என்று எதிர்பார்க்கிறேன்.

எழுத்தாளர், 'எட்டிப் பழம்'.

* * *

15-1-'50

'எருக்கம் பூ' ஆபீஸ்,
சென்னே, 18.

மிஸ்டர் எட்டிப்பழம்: உங்கள் 'பலீன் சடு குடு'வில் ஓட்டமே இல்லேயே. இந்தமாதிரிக் கதைகளே எங்கள் பத்திரிகையில் போட்டால் நாங்கள் பத்திரிகை உலகிலிருந்து குடுதுடு வென்று ஒரே ஓட்டமாக ஓட வேண்டியதுதான். இனிமேலாவது நல்ல கதைகளாக எழுதவும்.

ஆசிரியர், 'எருக்கம் பூ'.

* * *

19-1-'50

எட்டிப்பட்டி,
மதுரை ஜில்லா.

ஓய் ஆசிரியரே: நான் இத்தனே நாளாகப் பொறுமையாக இருந்துவிட்டேன். இப்பொழுது அனுப்பியிருக்கும் 'குரங்கின் குடியரசு' என்ற சிறுவர் கதையையாவது தாங்கள் பிரசுரிக்காவிட்டால் இந்த ஜில்லாவிலுள்ள எழுத்தாளர்கள் எல்லாரும் வேலே நிறுத்தம் செய்வோம். மேலும் தங்கள் பத்திரிகையை ஒருவரும் வாங்கக்கூடாது என்று பிரசாரமும் செய்வோம். ஜாக்கிரதை!

'எட்டிப்பழம்'.

* * *

22-1-'50

'எருக்கம் பூ' ஆபீஸ்,
சென்னே, 18.

ஸ்ரீமான் எட்டிப்பழம் அவர்களுக்கு, உங்கள் பொறுமையைச் சோதித்ததற்கு மன்னிக்கவும். குடியரசு மலரிலிருந்து உங்கள் கதைகளேப் பிரசுரிக்கிருேம். உங்கள் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் இவைகளால் எங்கள் பத்திரிகை, குடியரசு இந்தியாவில் நீண்ட நாள் வாழவேண்டுமென்று கடவுளேப் பிரார்த்தியுங்கள்.

ஆசிரியர், 'எருக்கம் பூ'.

கண் கண்ட தெய்வம்

'ஸேஜ'

[ஒரு கிராம வீதி. மாலை நேரம். சுப்பன் பம்பரம் ஆடிக்கொண்டே வருகிறான். எதிரே ரப்பர்ப் பாப்பு ஒன்றை ஜேபியில் திணித்துக்கொண்டே கண்ணன் ஓடிவருகிறான்.]

கண்ணன்: சுப்பா, சுப்பா, மாயனூரிலே பெரிய அதிசயமாண்டா. எல்லாரும் போய்ப் பார்க்கிறார்கள். நாமும் போகலாமா?

சுப்பன்: என்னடா அப்பேர்ப்பட்ட அதிசயம்?

கண்ணன்: கொஞ்ச நாளாய் ஒரு பெரிய ஆலமரத்தின் கீழே யார் என்ன கேட்டாலும் சாமியே பதில் சொல்கிறதாம்!

சுப்பன்: நிஜமாகவா? சரி; போகலாம் வா.

[பெரிய ரஸ்தா வழியாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். வெகு தூரத்தில் ஒரு பெரிய மரம் தெரிகிறது.]

கண்ணன்: அதோ அந்த மரந்தாண்டா. (நெருங்க நெருங்க மரத்தடியில் கும்பல் ஏராளமாக இருப்பது தெரிகிறது.) பார்த்தாயாடா கூட்டத்தை!

[அரைமணி நேரங் கழித்து அங்கே வந்து சேருகிறார்கள். அதற்குள் இருட்டிவிடுகிறது.]

ஜனங்கள்: ஹரோ ஹரா! அப்பனே!

[எல்லாரும் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள். கண்ணனும் சுப்பனும் கும்பலில் புகுந்து மரத்தடிக்கு வருகிறார்கள். மரத்தடியில் ஒரு பண்டாரம் உட்கார்ந்திருக்கிறான்.]

ஒரு கிழவி: (பயபக்தியோடு) ஹரோஹரா! என் மவன் பட்டாளத்திலே சேர்ந்தவன் திரும்பி வரவேயில்லை. அவன் வருவானா, மாட்டானா? ஆண்டவனே!

பண்டாரம்: உன் பெயர் என்ன? ஊர் என்ன? ஊர் அறியச் சொல்.

கிழவி: (கன்னத்தில் அறைந்து கொண்டே உரக்க) என் பேர் நாகம்மா. வில்லையூர்; ஆண்டவனே! மவன் பேர் சோமு.

பண்டாரம்: காணிக்கை செலுத்தி, சூடம் கொளுத்தினயா? உம்...சரி. ஹரோஹரா!

சோலையா ஆண்டவனே
சோமுவின் சேதிதன்னை
வில்லையூர் நாகம்மாள்
விரைவில் குறை தீர

உஸ்...கூச்சல் போடாதீங்க...சாமி பேசப்போவுது.

[கப்பென்று பேச்செல்லாம் அடங்கிவிடுகிறது.

அப்போது ஆகாயத்திலிருந்து அசரீரிமாதிரி ஏதோ கேட்கிறது.]

அசரீரி: ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?...

ஜனங்கள்: (மயிர்க்கூச்செடுக்க) ஆஹா ஆஹா!

சுப்பன்: (ஆச்சரியத்தோடு) இதென்னடா? கண்ணு! பண்டாரம் பதிலே சொல்லவில்லே; ஆனல் வேறெங்கேயோ குரல் கேட்கிறதே! அதிசயமான்னு இருக்கிறது?

கிழவி: (அழுதுகொண்டே) என் தலைவிதி அவ்வளவுதான். (போகிருள்.)

சுப்பன்: கிழவியைப் பார்த்தா பரிதாபமா இருக்கிறதடா!

கண்ணன்: (எதையோ யோசித்துக்கொண்டே) ஆமாண்டா.



சுப்பன்: என்னடா பிரமாத மாய் யோசனை செய்துகொண் டிருக்கே?

கண்ணன்: (சுப்பன் காதோடு) அது இருக்கட்டும். ஏதாவது விழுது தெரிகிறதா பார்!

சுப்பன்: ஏண்டா ?

கண்ணன்: மெதுவாகப் பேசு. வா, சற்றே தள்ளிப் போகலாம்.

[இருவரும் இருளில் மறைகிறார்கள். அங்கே

விழுது ஒன்று தெரிகிறது. கண்ணன் அதைப் பிடித் துக்கொண்டு மேலே ஏறுகிறான்.]

சுப்பன்: அடே! இந்த இருட் டிலே அங்கே என்னடா வேலை?

கண்ணன்: சீ! கத்தாதே! மேலே ஏறு.

சுப்பன்: (பயத்தோடு) ஐயோ! சாமி இருக்கிற மரமாச்சேடா!

கண்ணன்: மடையா, ஏறுடா. எனக்கு ஆனது உனக்கும் ஆகட்டும், சும்மா ஏறுடா.

[உள்ளுக்குள் பயம் இருந் தாலும், 'என்னதான் நடக்கிறது பார்க்கலாம்' என்று சுப்பனும் கூடவே ஏறுகிறான்.]

கண்ணன்: (அடிமரத்துக்கு மேல் வந்து நிற்கிறான். அப் போது மரத்துக்குள்ளிருந்து ஏதோ வெளிச்சம் அவன் கண் ணில் படுகிறது.) அடேடே!

சுப்பன்: (பின்னால் வந்து கொண்டே) என்னடா?

கண்ணன்: (வெளிச்சம் வரும் இடத்தைக் காட்டி) அதோ பார். கிட்டப்போய்க் கவனிக்க லாம். (இரண்டு பேரும் வெளிச் சம் வரும் இடத்தை நெருங்கு கிறார்கள். கண்ணன் எட்டிப் பார்க்கிறான். பிறகு மெதுவாகச் சிரித்துக்கொண்டு) சுப்பா! சத்தம் போடாமல் வந்து பார்.

[அதே சமயம் மறுபடியும் அசரீரி அவர்களருகில் பேசுவது கேட்கிறது.]

அசரீரி: நன்மையே தீமை இல்லை; தீமையும் நன்மையாமே.

சுப்பன்: (மரத்துக்குள் ஓர் ஆள் நுழையும் துவாரம் தெரிவதைக் கவனித்து ஆச்சரியத்தோடு உள்ளே பார்த்துவிட்டு, அடேடே! குத்து விளக்கு எரியுதடா! ஒருத்தன் கையிலே ஏதோ காகிதமும் புனல்மாதிரி ஒரு குழாயும் வச்சிண்டிருக்கான்!

கண்ணன்: (சிரித்துக் கொண்டே) உரக்கக் கத்தாதே! விஷயம் தெரிஞ்சுதா? கண் கண்ட தெய்வந்தானே?

சுப்பன்: இல்லேடா, கண்ணன் கண்டுபிடிச்ச தெய்வம்! கடைசியிலே என்னடா, இதுதானு? பண்டாரம் பலே கைகாரன்!

கண்ணன்: (குறும்புச் சிரிப்போடு யோசித்து) இரு இரு; மீதியையும் பார். (ஜேபியிலிருந்து ரப்பர்ப் பாம்பை எடுக்கிறான்.)

சுப்பன்: ஓஹோ!

கண்ணன்: கத்தாதேடா!

[அசரீரி மறுபடியும் பேசுவது கேட்கிறது. அதே சமயம் கண்ணன் ரப்பர்ப் பாம்பை அடி மரப் பொந்துக்குள் இருக்கும் ஆளின்மேல் குறிபார்த்துப் போடுகிறான்.]

அசரீரி: தீமையே நன்மையில்லை... ஐயோ! ஐயோ! ஆ, ஊ! பாம்பு! பாம்பூ!

[கீழே ஒரே கலவரம். அங்கே அடிமரத்தில் படாரென்று சத்தம் கேட்கிறது. இதுவரை தெரியாதிருந்த ஒரு பொந்தும் சிறு கதவும் திடீரென்று தெரிகின்றன. பொந்து வழியாக ஒரு பையன், "ஐயோ! பாம்பு!" என்று அலறிக் கொண்டே வெளியே ஓடிவருகிறான்.]

ஜனங்கள்: அடேடே! இவன் தாண்டா அசரீரி! நம் கண்ணிலெல்லாம் பொடி தூவிவிட்டான், பாருடா. எங்கேடா அந்தப் பண்டாரம்? அதோ ஓடுகிறான்... பிடியுங்கடா அவனை?

[பண்டாரம் கையில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓட அவனைத் துரத்திக்கொண்டு ஒரு கும்பல் போகிறது.]

கண்ணன்: பார்த்தாயா பண்டாரத்தின் பாட்டை! ஹோ ஹோஹோ! (அவனும் சுப்பனும் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார்கள்) ஆட்டம் 'க்ளோஸ்.' இனிமேல் திரும்பிப் போக வேண்டியதுதான்.

[இருவரும் கீழே இறங்கி, ரப்பர்ப்பாம்பைப் பொந்திலிருந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள்.]

—திரை—

ரூபகுமாரன்

'அநசூயா'

தேவதச்சன் ஒரு நாள் காலையில் குலாலன் வீட்டுக்கு வந்தான். இருவரும் ஆப்த நண்பர்கள். தொழிலில் நிபுணர்கள். அதிருஷ்டம் இல்லாதவர்கள். அவர்களால் அந்தக் கிராமத்தில் குடும்பம் நடத்தவே முடியவில்லை. வருமானத்தை உத்தேசித்து அவர்கள் தங்கள் இள மனைவிகளை விட்டு, வேறு ஊர் சென்று சம்பாதிக்கத் தீர்மானித்தார்கள்.

தேவதச்சன் வந்ததும், "என்னப்பா, முடிவாகிவிட்டதா? என் மனைவிகூடச் சம்மதித்துவிட்டாள். திங்கள்கிழமை புறப்படுவோமா?" என்றான் குலாலன்.

"சரி" என்றான் தேவதச்சன்.

குறிப்பிட்ட திங்கள்கிழமை வந்தது. அதற்குள் அவர்கள் தங்கள் நட்பைப் பந்தப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள்.

தேவதச்சன் ஒரு யோசனை சொன்னான்: "நாம் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம். என் மனைவியும் உன் மனைவியும் இப்பொழுது கர்ப்பமாய் இருக்கிறார்கள். நமக்குப் பிறக்கும் குழந்தைகளில் ஒன்று ஆணும் ஒன்று பெண்ணுமாக இருந்தால் இருவரும் பெரியவர்களான பின்பு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். எப்படி இந்த யோசனை?"

"ஆகா, பேஷாகச் செய்யலாம்; நான் தயார்" என்றான் குலாலன்.

ஒப்பந்தம் எழுதி முடிந்ததும் அவர்களுடைய பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மனைவிக்கு ஆறுதல் கூறிவிட்டு, தேவதச்சனும் குலாலனும் புறப்பட்டார்கள்.

கொஞ்ச நாட்கள் ஆயின. குலாலனுடைய மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். ஆகா, ரோஜாப் புஷ்பம் போன்ற நிறம்; கரு வண்டுகள் மாதிரி இரு சிறு அழகான கண்கள். அந்தக் குழந்தையின் வனப்பைக் கண்டு பிரமிக்காதவர்களே இல்லை.

அதே சமயத்தில் தேவதச்சனுடைய மனைவியும் பிரசவித்தாள். அவளுக்கு ஆண் குழந்தை! ஆனால், அந்தக் குழந்தையின் சொரூபத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. குழந்தையா அது! ஏதோ ஒரு விசித்திர ஜந்துவைப்போல் இருந்தது.

தேவதச்சனுடைய மனைவி இந்த விசித்திரப் பிறவியைப் பார்த்து நிலை குலைந்து போனாள்.

ஆனால் இந்த விசித்திரப் பிறவி மற்றக் குழந்தைகளைப் போல இல்லை. அது வாய்திறந்து பேசிற்று. நடந்தது, நடக்கப் போவது எல்லாவற்றையும்

முன்னறிந்து சொல்லும் மந்திர சக்தி அதற்கு இருந்தது.

இப்படிப் பல வருஷங்கள் சென்றன. குழந்தை என்னவோ வளரவேயில்லை. சித்திரக் குள்ளனைப்போல மண்டை வீங்கி, உடல் சிறுத்து, கைகள் குச்சியாகச் சூம்பி, விரல்கள் பருத்து விகாரமாய் இருந்ததால் சித்திரக்குள்ளன் என்ற பெயரே அவனுக்கு நிலைத்து விட்டது.

தேவதச்சன் போய்ப் பதினைந்து வருஷங்கள் ஆயின. ஒரு நாள் சித்திரக்குள்ளன் தன் தாயை அழைத்து, "அம்மா, அம்மா! அப்பா நாளைக்கு வரப் போகிறார். குலால மாமாவும் கூடவே வருகிறார். உன் சிநேகிதி வீட்டுக்கும் போய்ச் சொல்லிவிட்டு வா" என்றான்.

அப்படியே இரண்டு தாய்மாரும் தம் தம் வீட்டைச் சிங்காரித்து, விருந்து சமைத்து வைத்து, வாசலுக்கு இழை கோலமிட்டு, ஆரத்தித் தட்டேந்தி அவர்கள் வரவை விழாவாகக் கொண்டாடினார்கள்.

குலாலனின் மனைவி எல்லையற்ற பெருமை கொண்டாள். விலை மதிப்பில்லாத மாணிக்கத்தைப் பெற்றவள் அல்லவா? குலாலன் மகிழ்ச்சியினால் அப்படியே பூரித்துப் போனான்.

ஆனால் தேவதச்சனின் வீட்டிலோ-? அவன் மனைவி தயங்கித் தயங்கி நின்றாள். "ஆமாம்; என்ன விஷயம்?" என்று கேட்டான் தேவதச்சன்.

"ஒன்றுமில்லையே. எல்லாம் நல்ல சமாசாரந்தான்; ஆனால்..."

தேவதச்சன் துணுக்குற்று, "என்ன குழந்தை பிறந்தது?" என்று கேட்டான்.

"ஆண்குழந்தை! ஆனால்..."

"என்ன ஆனல் வேண்டிக் கிடக்கிறது? போய்விட்டதாக்கும்! அதுதானே?"

"போயிருந்தாலும் தேவலையே."

"பின்னே அவன் எங்கே? கூப்பிடு, பார்க்கலாம் அவனை!"

"அதோ பாருங்கள்" என்று அவன் மனைவி ஒரு மூலையைச் சுட்டிக் காட்டினாள். தேவதச்சன் திரும்பிப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனான். பிறகு அந்தப் பையன் பேசுவதைக் கேட்டுமனம் தேறினான்; கொஞ்சினான்; கொண்டாடினான்.

இப்படிக் கொஞ்ச காலம் சென்றது. பையன அப்பாவிடம், "அப்பா, அப்பா! என் கல்யாண வயசு வந்துவிட்டது. முன்னே குலால மாமாவோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டாயே, நினைவு இருக்கிறதா? போய்க் கல்யாணத்துக்கு என்ன சொல்கிறார் என்று கேட்டுவிடேன்" என்றான்.

குலாலன் என்ன பதில் சொல்வான் என்று தேவதச்சனுக்குத் தெரியாதா? இருந்தாலும் தன் கடமை என்று கிளம்பிப் போனான்.

"என்னப்பா, இந்தப் பக்கம் காற்றடிச்சது" என்று வரவேற்றான் குலாலன்.

"எல்லாம் நல்ல காற்றுத் தான்" என்றான் தேவதச்சன்.

"அப்படி நல்லதாகவே இருக்கட்டும். அது சரி: வந்த விஷயத்தைச் சொல்லேன்."

"பிரமாதம் ஒன்றுமில்லே. நம்முடைய ஒப்பந்த விஷயமாய்-" என்று இழுத்தான்தேவதச்சன்.

"ஒப்பந்தமா? அதற்கென்ன வந்தது இப்போது?" என்று இடைமறித்தான் குலாலன்.

"உன் பெண்ணுக்கும் என் பிள்ளைக்கும் கல்யாண வயசு வந்துவிட்டது. நம் ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி கேட்க வந்திருக்கிறேன்" என்ருன் தேவதச்சன்.

அதைக் கேட்ட குலாலன் கேலியாகப் பெரியதாய்ச் சிரித்துவிட்டு, "அடடே, உனக்கு எவ்வளவு தைரியம்? உன் விசித்திரமான ஜந்துவுக்கு என் ஸ்வர்ணக்கிளியைக் கேட்க வந்துவிட்டாயே; உனக்கு வெட்கமாய் இல்லே!"

"அது சரி, ஒப்பந்தம் என்ருல் ஒப்பந்தந்தானே?" என்று கேட்டான் தேவதச்சன்.

குலாலன் கோபம் கொண்டான். வார்த்தை வளர்ந்தது; "இந்தப் பக்கம் இனித் திரும்பாதே" என்று தேவதச்சனே விரட்டிவிட்டான்.

சித்திரக்குள்ளனுக்கு எல்லாம் முன்னபேயே தெரியும். இருந்தாலும் தந்தை வந்து நடந்ததைக் கூறியதும், "அவன் கிடக்கிருன். நமக்கு நியாயம் தான் முக்கியம். அரசனுடைய நீதிஸ்தலம் எங்கே போயிற்று?" என்று சொன்னுன்.

அன்று நீதிஸ்தலத்தில் ஏகப்பட்ட கூட்டம். அரசன் தர்பாரில் அமர்ந்ததும் குலாலனேக் கூண்டில் ஏற்றி விசாரித்தான்.

"என்னப்பா, குலாலன் என்பது நீதானே?" என்று கேட்டான் அரசன்.

"ஆம், அரசே!" என்றான் குலாலன்.

"தேவதச்சன் என்பது, இதோ நிற்கிறானே, இவன் தானே?"

"ஆம், அரசே!"

"இவனோடு நீ இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது உண்மைதானா?"

"உண்மைதான், அரசே."

"இதோ பார்: இது உன் கையெழுத்துத்தானா?"

"ஆமாம்; என் கையெழுத்துத்தான், அரசே."

"பின் ஏன் உன் கையெழுத்தையே நீ அவமதிக்கிறாய்? ஏன் ஒப்பந்தப்படி நடக்க மறுக்கிறாய்?"

"அது பெரிய கதை, அரசே" என்று சொல்லிவிட்டு, குலாலன் நடந்ததை வர்ணித்தான். அரசன் பொறுமை இழந்து சினத்துடன், "போதும், நிறுத்து. என்னவானாலும் சரிதான். ஒப்பந்தப்படி நடக்க வேண்டியது உன் கடமை. தவறினாயோ உன் தலை நிலத்தில் உருளும். ஜாக்கிரதை!" என்று தீர்ப்புச் சொல்லிவிட்டான்.

பிறகு என்ன? ஸ்வர்ணக்கிளி ஸ்வர்ணலதா சித்திரக் குள்ளனின் கழுத்தில் மாலையிட்டாள். கல்யாணம் ஆனவுடனேயே சித்திரக் குள்ளன் அவளைத் தானே புதிதாகக் கட்டிய குடிசைக்கு அழைத்துச் சென்றான். குடிசைக்குள் அடி எடுத்து வைத்தாளோ இல்லையோ, மந்திர சக்தி கொண்ட சித்திரக் குள்ளனின் மகிமை அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. சித்திரக் குள்ளன் மூன்று தரம் தரையில் உருண்டு கரணம் போட்டான். அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் அவள் எதிரே அழகு வாய்ந்த ஒரு யௌவன புருஷனாக அவன் தோன்றினான்.

"பெண்ணே! கல்யாணம் ஆகிவிட்டதனால் என் மீதுள்ள சாபம் நீங்கும் காலம் வந்துவிட்டது. இன்னும் முப்பது நாள் நான் பழையபடியே இருந்துதான் தீரவேண்டும். இந்த விஷயத்தை யாரிடமாவது போய்ச் சொல்லி வைத்தாயோ, ஜாக்கிரதை, என்னை இழந்து விடுவாய்!" என்றான் சித்திரக் குள்ளன்.

வேறு எது கிடைத்தாலும் அதற்காக இவனை இழக்க ஸ்வர்ணலதா விரும்பவில்லை. "அவசியம் இந்த ரகசியத்தைக் காப்பாற்றுவேன்" என்று வாக்குறுதி செய்தாள்.

என்ன இருந்தாலும் பெண்கள் பெண்கள்தானே! ஆடைதான் நீண்டதே தவிர, புத்தி கட்டைதான்.

சித்திரக்குள்ளனுக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டு இவள் எப்படி இவ்வளவு சந்தோஷத்துடன் இருக்கிறாள் என்று ஸ்வர்ணலதாவின் தாய்க்கு ஆச்சரியமாய் இருந்தது.

"என்னடி?" என்று கேட்டாள். பதில் சரியாகக் கிடைக்கவில்லை. வற்புறுத்திக் கேட்டாள். ஸ்வர்ணலதா வாயைத் திறக்கவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு இருபத்தொன்பது

நாட்கள் கழிந்தன. முப்பதாவது நாள் பிறந்தது. இன்னும் சில மணி நேரந்தானே. இதற்குள் சாபம் நீங்க ஆரம்பித்திருக்குமே என்று அவளுக்குத் தோன்றிற்று. ஒவ்வொரு நிமிஷமும் அம்மாவின் உபத்திரவத்தை அவளால் பொறுக்க முடியாமல் இருந்ததால் உண்மையைக் கூறிவிட்டாள்.

அவள் முடிப்பதற்குள் சித்திரக்குள்ளன் அவள் எதிரே தோன்றினான். "பேதைப் பெண்ணே, என்ன காரியம் செய்துவிட்டாய்! நீ இனி என்னை மறந்துவிட வேண்டியதுதான். நானும் உன்னை மறக்க வேண்டியதுதான். இனி என்னை எப்படிக் காண்பாய்? அதனால், இந்தா இந்தப்

பையைக் கையில் வைத்துக் கொள். எடுக்க எடுக்கக் குறையாத நாணயங்கள் இதில் இருக்கின்றன. இதை வைத்துக்கொண்டு காலத்தைக் கழித்துக்கொள்'' என்று சொல்லிக் கொடுத்துவிட்டு மறைந்தான்.

ஸ்வர்ணலதா முட்டிக்கொண்டாள்; மோதிக் கொண்டாள். அழுதாள்; அங்கலாய்த்தாள். சித்திரக்குள்ளன் மறைந்தவன் மறைந்தவன்தான்!

இது இப்படியிருக்க, அலை துள்ளி எறியும் சமுத்திரக் கரையருகில் ஒரு முடவனும் ஒரு குருடனும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். இரண்டு பேரும் பிச்சைக்காரர்கள்.

"அட பொட்டைப் பயலே! எவ்வளவோ நாளாக நாம் பட்டினி கிடந்து இந்த முறுக்குக் கிடைத்தது. அதையும் எனக்கு ஒட்டவிடாமல் தண்ணீரில் தட்டி விட்டு விட்டாயே, பாவிப் பயலே!'' என்று கத்தினான் முடவன்.

பொட்டையன், "கண் தெரிந்தால் இப்படிச் செய்வேனா?'' என்று கூறினான்.

இதற்குள் முடவன், "ஓ, அதோ பாரடா!'' என்று கூச்சலிட்டான். பொட்டையன் எதைப் பார்க்க முடியும்?

"என்னடா சொல்கிறாய்? அங்கே என்ன தெரிகிறது?''

"எவ்வளவு அழகான மாளிகை அது? அதன் பிரகாசம் கண்ணைப் பறிக்கிறதே! வாடா, அங்கே போய்ப் பார்க்கலாம்! நமக்கோ நல்ல பசி. அங்கே ஏதாவது கிடைக்கிறதா பார்க்கலாம்!'' என்று மூச்சு வாங்கக் கூறினான் முடவன்.

"அப்படியானால் உடனே புறப்படு'' என்றான் குருடன், முடவனைப் பிடித்துக்கொண்டு.

அருகில் வர வர, "அடே குருட்டுப் பயலே! இது தங்கத்தால் ஆன மாளிகையடா! தேவதைகளுடைய மாளிகையாகத்தான் இருக்கும்!'' என்றான் நொண்டி.

"பயப்படாமல் உள்ளே நுழைந்து போ! நம்மிடம் என்ன இருக்கிறது? நாம் என்னவோ ஒன்றையும் இழக்கப் போவதில்லை. அங்கே ஏதாவது கிடைத்தால் அது நமக்கு லாபந்தானே?'' என்றான்.

அவர்கள் அந்தப் பிரம்மாண்டமான மாளிகையினுள் நுழைந்தார்கள். எங்கும் ஆள் அரவமே இல்லை. ஆனால் ஒவ்வொரு மண்டபமும் பிரமாத அலங்காரமாய் இருந்தது. விலை மதிப்பில்லாப் பண்டங்கள் எங்கும் காணப்பட்டன.

குருடன் சொன்னான்: "முதலில் சாப்பாடு கிடைக்கிறதா, பாரடா!''

இதற்குள் 'கிரீச்' என்று சத்தம் வந்தது. அவர்கள் உளறியடித்துக்கொண்டு அங்கே கிடந்த ஒரு கட்டிலின் அடியில் பதுங்கிக்கொண்டார்கள். முடவன்பட்டும் மறைவில் இருந்தபடியே அங்கே நடப்பதைப் பார்த்தான்.

மாளிகையின் வைரம் பதித்த ஜன்னல் வழியாக, ஒன்றன்பின் ஒன்றாக எட்டுப் புறாக்கள் பறந்து வந்து நுழைந்தன. அந்த மண்டபத்தினுள் நுழைந்

ததும் எல்லாப் புருக்களும் மூன்று தடவை கரணம்போட்டன. உடனே எட்டு அழகிய வாலிபர்களாக அவை மாறி விட்டன.

அவர்களில் ஒருவன் மற்றவர்களைப் பார்த்து, "எங்கே, அப்பா, நம் சித்திரக்குள்ளனை இன்னும் காணவில்லை?" என்றான். அதற்குள் இன்னும் ஒரு புரு உள்ளே நுழைந்து கரணம் போட்டது.

"இதோ வந்துவிட்டானே!" என்றார்கள் மற்றவர்கள்.

எல்லாரும் பொன்னாசனத்தில் உட்கார்ந்தார்கள். உடனே எங்கிருந்தோ ஒன்பது வெள்ளி இலைகளில் அறுசுவை உண்டி வந்து சேர்ந்தது. எல்லாரும் ஆரவாரம் செய்து கொண்டே சாப்பிட்டார்கள். முடவனுக்கும் குருடனுக்கும் அந்த வாசனையினால் நாக்கில் ஜலம் ஊறியது.

சாப்பாடெல்லாம் ஆனதும் கடைசியாக வந்த சித்திரக் குள்ளனைத் தவிர மற்றவர்கள் புரு உருவத்துடன் வெளியே பறந்து சென்றார்கள். சித்திரக் குள்ளன் கண்ணில் ஜலம் கசிய, "ஸ்வர்ணலதா! என்று நீ இங்கு வரப்போகிறாயோ? என் சாபம் என்று நீங்கப் போகிறதோ?" என்று தனக்குள் கூறிக்கொண்டான். கடைசியாக அவனும் புரு உருவத்துடன் பறந்து போனான்.

முடவனும் குருடனும் பிறகுதான் நிம்மதியாக வெளிப்பட்டார்கள். அங்கே இருந்த மீதி ஆகாரத்தை வயிறு புடைக்கப் புசித்துவிட்டு, வெளியே வந்து பாதையோடு நடக்க ஆரம்பித்தார்கள்.

பல மாதங்கள் நடந்து கொண்டே இருந்தார்கள். கடைசியாக ஓர் ஊரில் ஒரு பெரிய மாளிகையின் முன்னால் ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்கள் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து, "இங்கே என்ன ஐயா கூட்டம்?" என்று நின்று விசாரித்தார்கள்.

"இந்த மாளிகையில் ஒரு பெண்மணி இருக்கிறாள். வருகிற ஏழை எளியவர்களுக்கெல்லாம் அன்னதானம் செய்து புதுப் பட்டாடைகள் கொடுத்து வருகிறாள். ஒரே ஒரு நிபந்தனைமட்டும் உண்டு. வருகிறவர்கள் அவளுக்கு விசித்திரமான கதை ஒன்றாவது சொல்லவேண்டும்" என்று ஒருவன் விளக்கிச் சொன்னான்

குருடன் காதில் இது விழுந்ததும், "அடே, முன்பு சோற்றைத் தின்றுவிட்டுப் புறப்பட்டோமே; ஒரு நல்ல வேஷ்டி உண்டா நமக்கு? சரி, சரி; தயங்காதே. நாமும் உள்ளே நுழையலாம்" என்றான்.

அவர்கள் முறை வந்தது. அந்தப் பெண்மணியின் எதிரில் அவர்கள் வந்ததும், "எங்களுக்கு அற்புதமான கதை ஒன்றும் தெரியாது. ஆனால் அற்புதமான சம்பவம் ஒன்று தெரியும். அதைச் சொல்லட்டுமா?" என்றான் முடவன்.

"சொல்லேன்" என்று பணித்தாள் அந்தப் பெண்மணி.

ஒன்பது புருக்கள் தங்க மாளிகைக்கு வந்த கதையையும் அதில் சித்திரக்குள்ளன் என்ற

கடைசிப் புறு கூறிய வார்த்தைகளையும் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தான் முடவன்.

அதைக் கேட்டதும் அந்தப் பெண்மணியின் உடல் சிலிர்த்தது. கண்ணில் ஜலம் கசிந்தது.

"அடடா, நானும் எவ்வளவோ கட்டுக் கதைகள் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட உண்மைக் கதையை நான் கேட்டதேயில்லை. அது சரி; எனக்கு ஒரு தடவை அந்த இடத்தைக் காட்ட முடியுமா? உங்கள் வறுமையை அடியோடு போக்கிவிடச் செய்கிறேன்!" என்று கூறினுள்.

பிச்சைக்காரர்களுக்கு நன்ருக ஞாபகத்தில் இருந்தது. "அம்மணி! அவ்வளவு தூரம் நடப்பது என்ருல் வருஷங்கள் பிடிக்குமே என்றுதான் யோசிக்கிருேம்" என்ருர்கள்.

"அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். வாயு வேகம் மனுேவேகமாகப் போகக் கூடிய குதிரைகள் பூட்டிய ரதம் இருக்கிறது; கிளம்புங்கள்" என்ருள்.

இரண்டே நாளில் அந்தத் தங்க மாளிகையை அடைந்துவிட்டார்கள். முன்பு முடவனும் குருடனும் பதுங்கிக் கொண்ட கட்டிலினடியிலேயே இப்போது அவர்கள் மூவரும் பதுங்கிக்கொண்டார்கள்.

முன் மாதிரியே எல்லாம் நடந்தன. எட்டுப் புறுக்கள் முதலில் வந்தன. சித்திரக்குள்ளன் கடைசியாக வந்தான். எல்லாரும் கரணம் போட்டு உருவம் மாறி அழகிய வாலிபர்களாக உட்கார்ந்தார்கள். சாப்பாடு ஆனதும் மற்றவர்கள் முதலில் புறுவாக மாறிப் பறந்து செல்ல, சித்திரக்குள்ளன் மட்டும் அப்படியே உட்கார்ந்து, "ஸ்வர்ணலதா!" என்ருன்.

அவ்வளவுதான்; அடுத்த கணம் கட்டிலின் அடியில் ஒளிந்திருந்த பெண்மணி, "இதோ, அந்த அபாக்கியவதி!" என்று பாய்ந்து சென்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

"என் சாபம் தீர்ந்தது!" என்று பெருமூச்சு விட்டான் சித்திரக்குள்ளன்.

"என் கவலை தீர்ந்தது" என்று கூத்தாடினுள் ஸ்வர்ணலதா.

முடவனும் குருடனும் இந்த வேடிக்கையைப் பார்த்துப் பிரமித்துப் போனுர்கள்.

சித்திரக்குள்ளன் சாபம் நீங்கியதுமே மற்ற எட்டுப் பேர்களின் சாபமும் விலகிவிட்டது. அந்த எட்டுப் பேர்களும் அந்தத் தேசத்து ராஜகுமாரர்கள். ஆனதால் சித்திரக்குள்ளனிடமே அந்த மாளிகையை ஒப்படைத்துவிட்டுத் தங்களுடைய பாதி ராஜ்யத்தைக் கொடுத்துப் பட்டாபிஷேகமும் செய்து வைத்தார்கள். சித்திரக்குள்ளனுடைய புது உருவத்துக்கு அந்தப் பெயர் பொருத்தமில்லாததால் ரூபகுமாரன் என்ற அழகான பெயரையும் சூட்டினுர்கள்.

தேவதச்சனின் கையைக் கோத்துக்கொண்டு குலாலன் பட்டாபிஷேகத்தின்போது நின்ற காட்சியைப் பார்க்க வேண்டுமே!

மயிலும் குயிலும்

'சோமசன்மா'

ரொம்ப காலத்துக்கு முன்னால் ஒரு காட்டில் ஒரு மயில் இருந்தது. தோகையை விரித்து அது ஆடும்போது எவ்வளவு நன்றாக இருக்கும்! ஆகையினால் அந்த மயிலுக்குக் கர்வம் ஜாஸ்தியாக இருந்தது. தன்னைவிட அழகான பட்சி இந்த உலகத்திலேயே கிடையாது என்று அது நினைத்தது. அதனால் யாரையும் அது மதிப்பதில்லை. தெருவில் போகும்போதே விசிறியைப் போல் தன் தோகையைப் பாதி விரித்து வீசிக்கொண்டே போகும்.

குளத்தங்கரையில் கிழட்டு ஆந்தைகளும் ராஜாளிகளும் வைதிகமாகக் குளித்துக் கொண்டிருந்தால் அவைகள் மேல் தண்ணீரை வாரி இறைத்துவிட்டுப் போகும். பெண் புறாக்களும் கிளிகளும் கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது அவைகள் முன்னால் போய் அபிநயம் பிடித்துக்கொண்டே பரதநாட்டியம் ஆடும். தோகையை வீசி அவைகள் முகத்தில் அடிக்கும்.

எல்லாப் பட்சிகளும் அந்த மயிலைக் காணாத இடத்தில் கண்டபடி திட்டி ஏசும். ஆனால் நேரில் பார்த்தால் எல்லாம் அதை வாயாரப் புகழும். "என்ன இருந்தாலும் மயிலைப் போல் அழகு வேறு யாருமே கிடையாது" என்று சொல்லும்.

ஒரு நாள் சாயங்காலம் அந்த மயில் ஓர் ஆலமரத்தடியில் நின்றுகொண்டு, 'தக்க தை', 'தக்க தை' என்று ஆடிக்கொண்டிருந்தது. சுற்றிலும் காட்டில் இருந்த மிருகங்கள் சிங்கம், புலி, கரடி, ஓநாய், மான், ஒட்டகம், ஆடு,

மாடு ஆகிய எல்லா மிருகங்களும் வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தன. புரு, கிளி, குருவி, ஆந்தை, கருடன், கழுகு முதலிய பட்சிகள் எல்லாம் மரக்கிளைகளில் உட்கார்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தன.

இப்படியாக வெகு நேரம் மயில் ஆடிற்று. அதைக் கண்ட மிருகங்களும் பட்சிகளும், "ஆஹா! சபாஷ்! சபாஷ்!" என்று சத்தம் போட்டுக் கூத்தாடின.

அப்போது ரொம்ப தூரத்திலிருந்து ஒரு பாட்டுக்குரல் கேட்டது. 'கக்கூ', 'கக்கூ' என்று அந்தப் பாட்டு ரொம்ப இனிமையாயிருந்தது. அந்தக் குரலைக் கேட்ட மிருகங்கள் எல்லாம் ஒவ்வொன்ருக அங்கிருந்து கலைய ஆரம்பித்தன. பட்சிகளும் ஒவ்வொன்ருகப் பறந்து ஓடின.

அந்தமாதிரி இனிமையாகப் பாடியது யார் என்று கேட்டால், அதுதான் குயில். குயிலைப்போல இனிமையாகப் பாடுவதற்கு எவராலாவது முடியுமா? அதனுல்தான் அந்தப் பாட்டைக் கேட்க மிருகங்களும் பட்சிகளும் ஓடின.

ஆனந்தமாகக் கண்ணை மூடிக்கொண்டு ஆடின மயில் அங்கிருந்த மிருகங்களும் பட்சிகளும் போனதைப் பார்க்கவே இல்லை. கடைசியில் எல்லாம் போனபின் ஒரே ஒரு காக்கை மட்டும்தான் ஆலமரத்துக் கிளையில் உட்கார்ந்திருந்தது.

எல்லாப் பட்சிகளும் போனபின் இந்தக் காக்கை மட்டும் போகாமல் ஏன் உட்கார்ந்திருந்தது என்று கேட்கிறீர்கள் அல்லவா? அதற்கு ஒரு காரணம் இருந்தது. நீங்கள் குயிலைப் பார்த்திருக்கிறீர்களா? அதுவும் பார்ப்பதற்குக் கன்னங்கறேலென்று காக்கையைப் போல்தான் இருக்கும். ஆனுல் மிகவும் சிறியதாய் இருக்கும். காக்கைக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்ருல் காக்கை வாயைத் திறந்தால் கேட்கச் சகிக்காது; குயில் பாடினுலோ ரொம்ப ரொம்ப இனிமையாக இருக்கும். ஆகையினுல், தன்னைப்போல் இருந்தும் தனக்கு இல்லாத இனிமையான குரல் இந்தக் குயிலுக்கு மட்டும் இருக்கிறதே என்று காக்கைக்குப் பொருமை. அதனுல் எப்போதும் குயில் பாடும்போது காக்கை அங்கே போவதே இல்லை. இன்றும் அது போகாமல் மயிலின் நாட்டியத்தைப் பார்த்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தது.

மயில், "தறிங்கணத்தோம்" என்று ஒரு தீர்மானம் வைத்ததும் காகம், "பேஷ்!" என்று சொல்லிக் கையைக் கொட்டியது.

திடீரென்று கண்ணைத் திறந்த மயில் தனக்கு முன்



றால் ஒருவருமே இல்லாததைக் கண்டு ஆச்சரியப்பட்டு விழித்தது. அதற்கு ஒன்றுமே புரியவில்லை. அவ்வளவு பேரும் திடீரென்று எங்கே போனார்கள்!

அப்போது, "கா, கா!" என்ற காகத்தின் குரலைக் கேட்டு நிமிர்ந்து, "இவர்கள் எல்லாரும் எங்கே?" என்று கேட்டது மயில்.

"எல்லாரும் பாட்டுக் கேட்கப் போய் விட்டார்கள்!" என்றது காக்கை.

"பாட்டா? யார் பாடுவது?"

அதைக் கேட்ட காகம் சொல்லும்: "இங்கே குயில் என்று ஒரு பயல் இருக்கிறான். அவனைப் பார்த்தால் கன்னங்கறேல் என்று நெருப்புத் தணலைக் குளிப்பாட்டின மாதிரி இருப்பான். தான் பெரிய பாடகன் என்று அவனுக்கு மண்டைக் கர்வம். தன்னைப் போல் இனிமையான குரல் யாருக்குமே கிடையாது என்ற எண்ணம். அவன் பாட்டைக் கேட்க இந்த மிருகங்களும் பறவைகளும் ஓடியிருக்கின்றன. என்னதான் இருந்தாலும் உன்னுடைய நடையழகும் உன் தோகை அழகும் பார்ப்பதற்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது! சீச்சு மூச்சென்று அந்தப் பயல்கத்துவதை யார் கேட்கமுடியும்?"

காக்கை இவ்விதம் சொன்னதும் மயிலுக்கும் பொறுமையாக இருந்தது. தன்னுடைய நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவ்வளவு பேரும் ஒரு சின்னக் குயிலின் பாட்டைக் கேட்கப் போவது என்றால் அது எவ்வளவு பெரிய அவமானம்? எப்படியிருந்தாலும் அந்தக் குயில் எப்படித்தான் பாடுகிறது என்று பார்க்க அங்கே போயிற்று.

ஒரு மொட்டை வேப்ப மரத்தின் மேல் உட்கார்ந்து

கொண்டு குயில் ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டிருந்தது. பட்சிகளும் மிருகங்களும் கண்ணை மூடிக் கேட்டுக்கொண்டிருந்தன. அந்த இனிமையான குரலைக் கேட்டதும் அங்கே வந்த மயிலும் தன்னை மறந்து, "ஆஹா!" என்றது.

அப்போது கூடவே வந்த காக்கை, "என்ன ஆஹா? ஆளைப்பார்த்தாயா? எவ்வளவு விகாரம்? கண்ணை மூடிக்கொண்டுதான் அவன் பாட்டைக் கேட்க வேண்டும்!" என்றது.

மயிலுக்குக் காகம் சொன்னது நியாயம் என்று பட்டது. உடனே அங்கே மிருகங்களுக்கு மத்தியில் போய் நின்றுகொண்டு, "ஏ மிருகங்களே! என் நாட்டியத்தைவிட இந்தப் பயல் பாட்டு எந்த விதத்தில் உயர்ந்தது? என் ஆட்டத்தைக் கண்ணைத் திறந்துகொண்டு ரசிக்கலாம்; இவன் பாட்டை நீங்கள் கண்ணை மூடிக்கொண்டுதான் கேட்க வேண்டும். இரண்டு பேரில் யார் மேலானவன்?" என்றது.

உடனே எல்லாம், "அந்த மயில் பயலை விரட்டு!" என்று கூச்சல் போட்டன. பின், நடுவில் வந்து விகாரமான தொண்டையில் பேசிப் பாட்டைக் கெடுத்தால் கோபம் வராதா?

மயிலுக்கு ரொம்ப ரோசமாய் இருந்தது. "இந்தக் குயில் பயலைப் பழிக்குப் பழி வாங்குகிறேன் பார்!" என்று அங்கிருந்து கிளம்பிற்று.

மயிலை வாகனமாக வைத்துக்கொண்டு அதன் மேல் ஏறிக்கொண்டு வரும் ஸ்வாமி யார் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே? அதுதான், கந்தஸ்வாமி. மயில் நேராகக் கந்தஸ்வாமியின் கோயிலுக்குப் போயிற்று. கார்த்திகை விரதத்தன்று சுத்தப் பட்டினியாயிருந்து முருகனுக்கு முன்னால் ராத்திரி முழுவதும் தியானம் செய்தது. தன்னுடைய வாகனமான மயில் இவ்விதம் தபஸ் செய்யும்போது முருகன் நேரில் வராமல் இருப்பானா? விடியற்காலம் கோழி கூவும்போது முருகன் மயிலின் முன்னால் வந்து பிரசன்னமாகி, "அப்பனே மயில்! உனக்கு என்ன வேண்டும், கேள்!" என்றான்.

முருகனைக் கண்ட மயில் ஆனந்தக் கூத்தாடிற்று. பிறகு கைகூப்பி வணங்கிச் சொல்லும்: "வேல்முருகா! எனக்கு அழகான தோகை கொடுத்திருக்கிறாய். ஜோராக ஆடும் சக்தியும் கொடுத்திருக்கிறாய். ஆனால் இனிமையாகப் பாடும் சக்தியையும் கொடுத்து விட்டால் என்னைப்போல் அதிருஷ்டசாலி யாரும் இல்லை. அதைமட்டும் எனக்கு அருள வேண்டும்."

அதைக் கேட்ட முருகன் சொல்லுவான்: "ஏ மயிலே!

பார்த்தவர்கள் மயங்கும்படியான அழகை உனக்குக் கொடுத்திருக்கிறேன். அழகும் இனிமையான குரலும் இரண்டும் கொடுக்க முடியாது. ஆகையினால் இன்று முதல் உனக்கு இனிமையான குரல் இருக்கும். ஆனால் உன் உருவம் காக்கையைப் போல் கறுப்பாக மாறிவிடும்!''

இவ்விதம் முருகக் கடவுள் சொல்லி மறைந்ததும் மயிலின் உருவம் எப்படியாயிற்று என்று நினைக்கிறீர்கள்? நீலமும் பச்சையுமாய்ப் பளபளவென்று மின்னிய அதனுடைய தோகை முழுவதும் ஒரே கரியாகிவிட்டது. ஆனால் அது சந்தோஷமாகப் பாடிக்கொண்டே காட்டுக்குள் வந்தது.

அந்த மயில் நேராகத் தன் ஜாதிக்கார மயில்கள் இருக்குமிடத்துக்குப்போனதும் மற்ற மயில்கள் அதை முறைத்துப் பார்த்தன. "இது ஏதோ ஒரு ராட்சஸக் காக்காய்'' என்று நினைத்து எல்லாம் சேர்ந்து அதை விரட்டத் தொடங்கின. நம்முடைய மயில், "டேய்! நானும் உங்களைப் போல் ஜாதியில் மயில்தாண்டா! எவ்வளவு இனிமையாகப் பாடுகிறேன் பார்!'' என்று பாடிக்கூடக் காண்பித்தது. ஆனால் பிரயோஜனமில்லை. எல்லா மயில்களும் சேர்ந்து கல்லை வீசி எறிந்து அதை விரட்டின.

ஆகையினால் பிள்ளைகளே! ஆட்டம், பாட்டு இரண்டிலும் ஒருவர் கெட்டிக்காரராய் இருக்க முடியாது என்பதும் சுயமாக ஒருவருக்கு என்ன தெரியுமோ அதைக் கொண்டே திருப்தியடைவது தான் நல்லது என்பதும் இதனால் தெரிகிறது அல்லவா?

எழுத்திலே படங்கள்



1. கழுகு; 2. கிளி; 3. குருவி; 4. சேவல்; 5. ஆந்தை; 6. வாத்து.

வந்துவிட்டார்கள்!

'வாசகன்'

ராமாயணக் கதை உங்களுக்குத் தெரியுமே. அந்தக் கதையில் ஒரு குட்டிக் கதை இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

ராமர் சமுத்திரத்தில் அணை கட்டி லங்கையை அடைந்தார். அங்கே கடற்கரையில் தம்முடைய சேனைகளுடன் தங்கியிருந்தார். அந்தச் சேனைகளெல்லாம் குரங்குகள் என்பது நீங்கள் அறிந்த விஷயம். இனிமேல்தான் லங்கையின்மேல் படையெடுத்துச் சண்டையை ஆரம்பிக்க வேண்டும்.

குரங்குகளெல்லாம் மணலில் படுத்துக்கொண்டிருந்தன. சில கூடாரங்களில் சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவான் முதலியவர்கள் இருந்தார்கள். எல்லாவற்றுக்கும் நடுவில் ஒரு கூடாரத்தில் ராமர் படுத்துக் கொண்டிருந்தார். அருகில் லக்ஷ்மணன் விசிறிக்கொண்டு நின்றான்.

கூடாரத்துக்கு வெளியே திடீரென்று ஏதோ ஆரவாரம் கேட்டது. லக்ஷ்மணன் வெளியிலே சென்று பார்த்தான். "அதோ பகைவர்கள் வந்துவிட்டார்கள்; ராட்சஸர்கள் நம்மை எதிர்க்க வந்துவிட்டார்கள்" என்ற கூக்குரல் எங்கும் கேட்டது. குரங்குப் படைகளெல்லாம் குதித்துக் கொண்டிருந்தன. பகைவர் சேனை வருவதைப் பார்க்க வேண்டுமென்று மிக உயரமாக எழும்பிக் குதித்தன, சில குரங்குகள். சுக்கிரீவன் முதலியோர் கையில் அம்பையும் வில்லையும் எடுத்துக்கொண்டு கூடாரத்துக்கு வெளியிலே வந்து நின்றார்கள். குரங்குகள் குதித்து ஆரவாரம் செய்ததனால் எங்கும் ஒரே புழுதி.

இந்த முழக்கத்தைக் கேட்ட லக்ஷ்மணன் உடனே ராமரிடம் ஓடினுன். "அண்ணு, அண்ணு, ராட்சஸர்கள் வந்து விட்டார்கள். எழுந்திருங்கள். வில்லைக் கையில் எடுங்கள்!" என்று வேகமாகக் கத்தினுன்.

ராமர் படுத்தபடியே இருந்தார். அவர் முகத்தில் புன் சிரிப்பு மலர்ந்தது. அவர் இப்படி இருப்பதைப் பார்த்து லக்ஷ்மணனுக்குக் கோபந்தான் வந்தது. "என்ன அண்ணு, இப்படி இருக்கிறீர்கள்? ராட்சஸப் படை வந்துவிட்டது. நம்முடைய சேனைகளெல்லாம் தயாராக இருக்கின்றன. நீங்கள் தூங்கிக்கொண்டிருக்கிறீர்களே!" என்று படபடப்புடன் பேசினுன்.

ராமர் புன்சிரிப்போடு, "தம்பி, ராட்சஸப் படைகளை நீ பார்த்தாயா?" என்று மெதுவாகக் கேட்டார்.

"நான் பார்ப்பானேன்? அதோ சுக்கிரீவன் பார்த்ததாகச் சொல்கிருன்; ஜாம்பவான் பார்த்தாலும்; ஹநுமான்கூடப் பார்த்ததாகத் தெரிகிறது."

"அப்படியா? சுக்கிரீவனை இங்கே அழைத்து வா."

லக்ஷ்மணன் படபடப்புடனே வெளியிலே ஓடினுன்; அடுத்த நிமிஷம் சுக்கிரீவனுடன் ராமருக்கருகில் வந்து நின்று, "எழுந்திருங்கள். இதோ சுக்கிரீவன்!" என்றுன்.



ராமர் எழுந்திருக்கவில்லை. படுத்தபடியே சுக்கிரீவனைப் பார்த்து, "நீ ராவணன் படைகளைப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"நான் பார்க்காவிட்டாலும், நம்முடைய சேனை ராவணன் படையைப் பார்த்துவிட்டு, யுத்தத்துக்கு ஆயத்தமாக இருக்கிறது. ஜாம்பவான் பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன்" என்றுன்.

உடனே ஜாம்பவானை அழைத்து வரும்படி ராமர் சொன்னார். ஜாம்பவான் வந்தான். "பிரபோ, ஹநுமான் தான் சொன்னார்" என்று கூறினான்.

பிறகு ஹநுமான் வந்தான். அவன் நீலனைக் காட்டினான். இப்படியே நீலனுக்குப் பிறகு நளனும், குமுதனும், சுமுகனும், வக்ரனும் ஒவ்வொருவராக வந்து மற்றொருவரைச் சுட்டிக் காட்டினார்கள். இப்படியே விசாரணை தொடர்ந்து நடந்ததில் உண்மை வெளியாகிவிட்டது. ராவணன் படை வரவே இல்லை. இவ்வளவுக்கும் காரணம் ஒரு குட்டிக் குரங்கு என்று தெரிய வந்தது. நடந்தது இதுதான்:

அந்தக் குட்டிக் குரங்கு மணலைக் கிண்டி விளையாடிக் கொண்டிருந்தது. அதன் கையில் ஒரு மொச்சைக் கொட்டைச் சுண்டல் கிடைத்தது. அதைப் பிதுக்கியது. உள்ளேயிருந்த பருப்பு மேலே போயிற்று. குரங்குக்குட்டி விளையாட்டாக எழும்பிக் குதித்து மேலே போன பருப்பை லபக்கென்று கவ்வியது. அது எழும்பிக் குதித்ததை மாத்திரம் அருகில் இருந்த குரங்கு பார்த்தது. "இவனுக்குத்தான் இப்படிக் குதிக்கத் தெரியுமோ! நாம் இவனை விட உயரமாக எழும்பிக் குதிப்போமே!" என்று எண்ணி, அதுவும் குதித்தது. பக்கத்தில் இருந்த மற்றொரு குரங்கு குதித்தது. அதைப் பார்த்து நான்காவது குரங்கு ஒன்றும் குதித்தது. இப்படி நாலைந்து குரங்குகள் குதித்த போது, "பகைவர்கள் படை வருகிறதுபோல் இருக்கிறது. அதைப் பார்க்கத்தான் இவர்கள் எழும்பிக் குதிக்கிறார்கள்" என்று மற்றக் குரங்குகள் எண்ணிக் குதித்தன. அடுத்த படி பகைவர் வந்துவிட்டார்கள் என்ற வதந்தி பரவலாயிற்று. அது மெல்ல மெல்ல பரவி ஹநுமானுக்கு எட்டியது. அவர் யுத்த சந்நத்தரானார். ஜாம்பவான் முதலியவர்களும் ஆயத்தமானார்கள்.

இந்தச் சமாசாரம் விசாரணையின்மேல் தெரிய வந்தபோது ராமர் சிரித்தார். "என்ன லக்ஷ்மணா! என்னை அவ்வளவு ஆத்திரத்துடன் எழுப்பினாயே, விஷயம் எப்படி ஆயிற்று பார்த்தாயா?" என்று கேட்டார். அவன் தலையை கவிழ்த்துக் கொண்டான். மற்றவர்களும் அவ்வாறே மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள்.

சுண்டலைப் பிதுக்கின குரங்குக் குட்டிக்கு ராமர் தண்டனை கொடுத்திருப்பார் என்று நினைக்கிறீர்களா? அது என்ன செய்யும், பாவம்! ஒரு பை மொச்சைக் கொட்டைச் சுண்டல் செய்து அதற்குக் கொடுக்கும்படி ராமர் கட்டளையிட்டார். அதுதானே சரி?

குழந்தை திருடன்

'ராசு'

அன்று அறுபத்து மூவர் திருவிழா. வீதி முழுவதும் 'ஜே! ஜே!' என்று ஒரே ஜனக்கூட்டம்.

முத்து அம்மாவிடம் ஓடினன். "அம்மா! இன்னிக்கு அறுபத்துமூவராம் மயிலாப்பூலே! நான் போய்ப் பாத்துட்டு வரட்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாண்டா, முத்து! கூட்டத்திலே இடிபட்டு, நசுங்கிப்போகணும். போன வருஷம் போய்ப் பார்த்துட்டு, கஷ்டப்பட்டது தெரியாதா?" என்று அம்மா சொன்னுள்.

"இல்லேம்மா! நான் போயிட்டு வந்துடறேன், அம்மா!" என்று கெஞ்சினன் முத்து.

அம்மா என்ன செய்வாள்? "சரி! போயிட்டுச் சீக்கிரம் திரும்பிடு. ரொம்பக் கும்பலாய் இருக்கிற இடத்திலே போகாதே!" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினுள்.

முத்து சந்தோஷத்துடன் எடுத்தான் ஓட்டம், மயிலாப்பூரைப் பார்க்க!

"டேய்! ஓடாதேடா. வழியிலே 'கார் கீர்' வரப்போகுது!" என்று அம்மா கத்தினது காதில் விழுந்தால் தானே!

* * *

கோவிலுக்குள் நுழைந்தான் முத்து. வாசலில் ஒரே கும்பல். உள்ளே போவதற்காக ஜனங்கள் இடித்துப் புடைத்துக்கொண்டு நுழைந்தார்கள். முத்து வெகு கஷ்டப்பட்டு உள்ளே நுழைந்தான். வாசற்படியைத் தாண்டி உள்ளே போகும்பொழுது எதிரே ஒரு மனிதன் வந்துகொண்டிருந்ததைப் பார்த்தான்.

அந்த மனிதனுக்குச் சுமார் நாற்பது வயது இருக்கும். ரொம்ப அழகாகத் தலையை வாரிவிட்டிருந்தான்; வெள்ளை ஷர்ட்; ஜரிகை வேஷ்டி; அங்கவஸ்திரம் கழுத்தைச் சுற்றிப் பாம்புபோலத் தொங்கிக்கொண்டிருந்தது. கையிலே மோதிரங்கள் டால் வீசின. அவன் கையிலே அழகிய பெண்குழந்தை ஒன்று அழுதுகொண்டிருந்தது. அதன் கழுத்திலும், கையிலும் தங்க நகைகள் ஒளி வீசின. குழந்தை அழுவதை என்னவோ சொல்லிச் சமாதானப்படுத்த முயன்ருன்.

குழந்தை அழுவதை நிறுத்த வில்லை.

அவனை யாரும் கவனிக்கவே யில்லை. ஜனங்கள் உள்ளே நுழைவதில்தான் அக்கறை யாக இருந்தார்கள். அவன் அடிக்கடி திரும்பிப் பார்த் துக்கொண்டே போனுன்.

முத்துவைத் தாண்டிப் போகும்பொழுது, அவன் கண் ணில் பட்டுவிட்டான். அப் போதுதான் குழந்தையின் முகத்தைப் பார்த்தான் முத்து. அவனுக்குத் திக்கென்றது. ஏனென்ருல், அவனுக்குப் பக் கத்து வீட்டில் இன்ஸ்பெக்டர் ஒருவர் குடி இருந்தார். அவ ருக்கு ஒரு பெண். அந்தப் பெண்ணுக்கும் இந்தப் பெண்ணுச்கும் வித்தி யாசமே தெரியவில்லை. ஒரே சாயல்; ஒரே முகம். இன்னும் ஓர் ஒற்றுமை: சற்றுநேரத் துக்கு முன்பு, அறு பத்துமூவருக்குச் செல்வதற்காகக் குழந் தைக்கு அலங்காரம் செய்தார்கள். அப் பொழுது குழந்தைக்கு என்ன கவுனும் நகை களும் போட்டிருந்தார் களோ அவையே இருந்தன இந்தக் குழந்தைக்கும்.

முத்துவுக்கு அதனுல் தான் சந்தேகம் வலுத் தது. 'ஒருவேளை குழந்தை இன்ஸ்பெக்ட ருடையதாய் இருக்குமோ? இருந்தால் இவன் ஏன் எடுத் துச் செல்லுகிருன்?' என்ற கேள்வி அவன் மனத்தில் உதித்தது.

'அவர்களுடைய வேலைக் காரனுயிருக்கலாம். இல்லாவிட் டால் தெரிந்தவனுய் இருக்க லாம். உள்ளே ஒரே கும்பலாய் இருந்திருக்கும். குழந்தையைக் கொண்டுபோனுல், குழந்தை நசுங்கிவிடுமென்று பயந்து, வெளியே கொண்டுபோய் வைத்திருக்கும்படி சொல் யிருக்கலாம். அதனுல் குழந்தை அழுகிறதோ என் னவோ!'

இருந்தாலும் அவன் மன சுக்குச் சமாதானம் ஏற்பட

வில்லை. 'போகும்பொழுது, அவன் ஏன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்ருன்? அவன் முகம் ஏன் பயத்தால் வெளிறிப்போயிருந்தது?' என்பன போன்ற கேள்விகளுக்கு அவனுல் பதிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்குள் கூட்டம் அவனை உள்ளே கொண்டு வந்து தள்ளிவிட்டது. திரும்பிப் ...த்தான். அந்தக் குழந்தை அழுவதை நிறுத்தவே இல்லை. அந்த மனிதன் குழந்தையுடன் தேரடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

முத்து ஒவ்வோர் இடமாகப் பார்த்துவிட்டு அம்மன் சந்நிதிக்கு அருகில் வந்தான். அங்கு ஒரே கூட்டம். சிலர் பரபரப்புடன் மூலைக்கு ஒருவராகப் பதறிக்கொண்டிருந்தனர். நடுவிலே ஒரு ஸ்திரீ புலம்பிக்கொண்டிருந்தாள். முத்து சற்று அருகில் போய்ப் பார்த்தான். அந்த ஸ்திரீ யார் என்று தெரிந்துவிட்டது. இன்ஸ்பெக்டரின் மனைவிதான்!

"ஐயோ! என் குழந்தையை எந்தப் பாவியோ கொண்டு போய்ட்டானே. ஆயிரம் ரூபாய்வரை கழுத்திலே நகைகள் இருக்குமே. நகைக்காகக் குழந்தையைக் கொன்னுப்பிடப் போருனே! நகை போனுலும் போகட்டும். குழந்தை உசிரோடு வந்தால் போதும். யாரானும் அவனைப் பிடியுங்களேன்!" என்று புலம்பிக்கொண்டிருந்தாள்.

அவளைச் சுற்றி நாலைந்து பேர், "எப்படி வந்தான், எப்படிக் குழந்தையைக் கொண்டு போனுன்? உனக்குத் தெரியுமா? தெரியாதா? அவன் எப்படி இருப்பான்?" என்றெல்லாம் அநாவசியமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

முத்துவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. சற்று முன்பு கோபுர வாசலில் பார்த்த குழந்தை இன்ஸ்பெக்டர் குழந்தைதான். அவன் திருடன். அவன் திரும்பித் திரும்பிப் பார்த்தது, தன்னை யாராவது கவனிக்கிருர்களா என்று பார்ப்பதற்குத்தான்.

உடனே வாசலுக்கு ஓட்டமாய் ஓடினுன் முத்து. இவ்வளவு நேரத்துக்குள் அவன் எங்கே போனுனோ? ஆளைக் காணவில்லை. தேரடிக்கு ஓடினுன். கடைசியில் ஒரு கடையில் அதே அங்கவஸ்திரம் தெரிந்தது. பார்த்தால் அவன்தான். அழுகிற குழந்தைக்கு மிட்டாய் வாங்கிக்கொண்டிருந்தான். 'யார் பார்க்கப் போகிருர்கள் இந்தக் கூட்டத்தில்!' என்பது அவன் எண்ணம்.

அவனைப் பிடிக்க வேண்டுமே! துளியூண்டு முத்துவால் முடியுமா? சுற்றுமுற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்

தில் யாரோ போலீஸ் உத்தியோகஸ்தர் நின்று பேசிக்கொண்டிருந்தார்.

முத்துவுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த மனிதனின் பின்னால் போனான். தன் சொக்காயை எடுத்து அவன் கழுத்தில் சட்டென்று மாட்டி இறுக்கினான். பிறகு, "திருடன்! திருடன்! குழந்தையைத் திருடிக்கொண்டு போகிறான்!" என்று கத்தினான்.

சப்தத்தைக் கேட்டு அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர் ஓடி வந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு விட்டார்.

அவரைத் திரும்பிப் பார்த்தான் முத்து. "மாமா! நீங்கள் தானா? உங்க வஸந்தாவை, மாமிகிட்டேயிருந்து தெரியாமல், கும்பலிலே லாவிக் கொண்டு வந்துவிட்டான். திருட்டுப்பயல்! அதனால்தான் பிடித்துக்கொண்டேன்" என்றான் முத்து.

இன்ஸ்பெக்டருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. முத்துவை ஒரு கையால் அணைத்துக் கொண்டார். இதற்குள் அங்கு வந்த கான்ஸ்டபிள்களிடம் திருடனை ஒப்படைத்து விட்டு, ஒரு கையில் குழந்தையையும், மற்றொரு கையில் முத்துவையும் பிடித்துக் கொண்டு புறப்பட்டார்.

ஒரு வாரத்துக்குப் பிறகு முத்துவுக்குப் பரிசாக இன்ஸ்பெக்டரிடமிருந்து, ஒரு ஜரிகை வேஷ்டியும் சில்க் ஷர்ட்டும் வந்தன.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(L) 18. லக்ஷ்மிகுமார், P. S., சென்னை-14. 19. லீலா, S., கிருஷ்ணன், S, ஜம்ஷெட்பூர். 20. லோகநாயகி, T. R., பவானி. 21. லோகநாதன், க., யாழ்ப்பாணம். 22. லதா, பத்மா., கோயம்புத்தூர். 23. லலிதா, A. P., டில்லி. 24. லக்ஷ்மணன், T. C., சென்னை-1. (M) 19. மங்களம், K., பண்ருட்டி. 20. மனோன்மணி, G., மதுரை. 21. மணி, க. பி., கும்பகோணம். 22. மணி, S. B. S., ராமன், S. J., வில்லிவாக்கம். 23. மகாதேவன், B., சென்னை-1. 24. மண்ராஜன், A. S., ஒட்டம்பட்டு. 25. மணி, K., வாலாஜாபாத். 26. மதனகோபால், R. S., முகுந்தன், E. S., ஈரோடு. 27. முத்துரத்தின பாரதி, S., பாரத தேவி, S., ஜயபாரதி, S., தயாநிதி, S., மதுரை. 28. முத்துசாமி, M., சூலூர். 29. முனிசாமி, (ஊர் எழுதவில்லை). 30. முருகேசன், S.S., ராஜபாளையம். 31. முத்து சாமி, R., கரூர். 32. முனிசாமி, N., ராபர்ட்ஸன்பேட்டை. 33. மெய்யப்பன், வெ., காரைக்குடி. 34. மைதிலி, C., சரோஜா, C., மஞ்சக்குப்பம். 35. மோகனகிருஷ்ணன், மா., இரும்புலியூர். 36. மாசாணம், M., ஆண்டிப்பட்டி. 37. மகாலிங்கம், K., ஆண்டிப் பட்டி. 38. மாலதி, S., ஜம்ஷெட் பூர். 39. மெய்ப்பொருள், N., அம்மாப்பேட்டை. 40. முரளீதரன், R., திருவல்லிக்கேணி. 41. மாணிக்க வரதன், M., வில்லிவாக்கம். 42. மீனாக்ஷிசுந்தரம், T., (ஊர் எழுத வில்லை). 43. மோகன். ச., குமார், ச., முசிறி. 44. மகாலிங்கம், T. S. திருவான்மியூர். 45. மீனாக்ஷிசுந்த ரம், C. M., புவனேசுவரி, C. M., தாம்பரம். (N) 22. நாகேந்திரன், வே., கொழும்பு - 11. 23. நாக ராஜன், V., சுப்பிரமணியன், V. கோயம்புத்தூர். 24. நடேசன், R., சென்னை. 25. நாகராஜன், D. N., மாயூரம். 26. நிசார் அகமத் G., கோயம்புத்தூர். 27. நடராஜன், K., குடியாத்தம். 28. நடராசா, வே., யாழ்ப்பாணம். 29. நட ராஜன், A. N, வில்லிவாக்கம். 30. நாகசுப்ரமணியம், S., மகா தானபுரம். 31. நாகசுந்தரம், A., ராயப்பேட்டை. 32. நடராஜன், T. S., குடியாத்தம். 33. நீலாம் பிகை, சி., வரகூர். 34. நாகராஜன், M., ஆண்டிப்பட்டி. 35. நாணு, K., கோனேரிராஜபுரம். 36. நவரத் தினம், K., செவந்தனம், K., இலங்கை. 37. நரசிம்மன், C. D., கிட்டு, C. D., சென்னை-17. 38. நீலகண்டன், S., பத்தை. 39. நரசிம்மன், பா. ஸ்ரீ., லக்ஷ்மி, நாராயணன், வேணுகோபாலன், கொடுமுடி. (P) 26. பழனிவேலு, S., பவானி. 27. பர்வதம், N., ராமன், N., ஆண்டாள், N., முத்து சாமி, R., சென்னை - 5. 28. பத்ம நாதன், பொ., யாழ்ப்பாணம். 29. பழனியப்பன், A., கோயம்புத்தூர். 30. பஞ்சநதன், T., சந்தான கிருஷ்ணன், S., திண்டிவனம். 31. பட்டாபு, V., ராம்தாஸ், V., மேல் பேட்டை. 32. பரமசிவம், வீரப் பாண்டி. 33. பரமேசுவரன், S. சிவகுமார், S., புனா-2. 34. பட்டாபிராமன், K. N., கோபி செட்டிபாளையம். 35. பத்மநாபன், S. R., திண்டுக்கல். 36. பழனி யப்பன், K, தாமரைக்குளம். 37. பார்த்தசாரதி, S., நாகபூர். 38. பாப்புலு, வி. பி., கடலூர், N. T. 39. பார்வதி, V. R., பலவங்குடி. 40. புஷ்பராணி, K.G., சென்னை-2.

41. பிச்சை, R. மதுரை. 42. பிரமீளாபாய், S., சசிகலாபாய்,S., ஸாவித்திரிபாய், S., பெங்களூர் - 5. 43. புட்பலிங்கம், ச. பொ., சென்னை - 2. 44. புஷ்பா, R., மயிலாப்பூர். 45. பெரியசாமி, T. S., ஒட்டன்சத்திரம். 46. பெரியநாயகம், A., ஏர்வாடி. 47. பழனிசாமி, P., விழுப்புரம். 48. பத்மா, K. V., புதுடில்லி. 49. பிரபாகரன், S., சென்னை-20. 50. பூங்கோதை, K., இணைத்துக்கடவு. 51. பத்மாவதி, A., ஆண்டிப்பட்டி. 52. பழனிசாமி; A., ஆண்டிப்பட்டி. 53. பழனியப்பன், ஆ., மோகனூர், 54. புருஷோத்தமன், S., சென்னை-15. 55. பராசக்தி, கு. இறக்குவானை. 56. பிக்ஷேசுவரன், K. R., திரிபுரசுந்தரி, ராஜேராஜேசுவரி, K. R., சுலோசனா, K. R., வில்லிவாக்கம். 57. பிச்சுமணி, S., தஞ்சை. 58. பிச்சுமணி, V., வஸந்தா, வி., புனா, 2. (R) 60. ரங்கன், சு. ஆ., செல்வி, சீனு, பர்ஹாம்பூர். 61. ராமசந்திரன், K., கொழும்பு. 62. ராகவன், து., ஒதிக்காடு. 63. ருக்மிணி, P., ஆலப்புழை. 64. ரங்கநாதன், S., புதுப்பாக்கம். 65. ரகோத்தமராவ், G., ஹனுமந்தராவ், G., சென்னை-5. 66. ரகுநாதன், வெ.நா., சென்னை-8. 67. ரகுநாதன், ஞானபண்டிதன், கொழும்பு, 11. 68. ராஜலக்ஷ்மி, T. K., வேங்கடராமன், T. K., ஆலப்புழை. 69. இராமசாமி, வே. வி., பழனிசாமி, கமலா, மாதுங்கா. 70. ராஜாமணி, L., ரகுநாதன், மீனாக்ஷி, புது டில்லி. 71. ராஜாமணி, K. V., ஸ்ரீரங்கம். 72. ராமகிருஷ்ணன், சங்கரன், பத்மா ப்ரேமா, உமா, R., கல்கத்தா. 73. ராஜாமணி, S., தாமரைக்குளம். 74. ராஜேந்திரன், K. S, சாத்தூர். 75. ராமன், E. V., விஜபலக்ஷ்மி. E. V. நாகபூர். 76. ராமசாமி, R., குன்னூர். 77. ராஜமன்னார், V., திண்டிவனம். 78. இராமலிங்கம், மா.மு., மாயனூர். 79. ராமமூர்த்தி, K. R., சுப்பிரமணியன், K. R., கோயம்புத்தூர். 80. ராஜநாராயணன், கோ., உத்தமபாளையம். 81. ராமராவ், G. S. லக்ஷ்மணராவ், கிருஷ்ணமூர்த்திராவ்., சென்னை, 21. 82. ராஜேந்திரன், K., சோளிங்கபுரம். 83. ராமசாமி, A., பாலப்பட்டி. 84. ராமன், V., புதுக்கோட்டை. 85. ராஜேந்திரன், கா., மதுரை. 86. ராமன், கு. சா. சீ., ஆண்டிப்பட்டி. 87. ராமசாமி, P., தஞ்சாவூர். 88. ராமன், S. மணப்பாறை. 89. ராதாகிருஷ்ணன், P. G., சென்னை, 12. 90. ராமலிங்கம், S., கும்பகோணம். 91. ராமகிருஷ்ணன், N., சென்னை, 4. 92. ராமமூர்த்தி, S., மயிலாப்பூர். 93. ராஜாமணி, S., அருப்புக்

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

ஜூலை '50 கூபன் நெ:

கோட்டை. 94. ராமசாமி, K. V., சென்னை, 2. 95. ராமநாதன், K., விழுப்புரம். 96. ராமன், V. K, (ஊர் தெரியவில்லை) 97. ராகவேந்திரராவ், B. S., அரக்கோணம். 98. ராஜலக்ஷ்மி, சென்னை, 24. 99. ராமன், S., அம்பாசமுத்திரம். 100. ராஜு, S., உடுமலைப்பேட்டை. 101. ராஜு, S., சென்னை, 14. 102. ராகவேந்திரன், C. N., சென்னை, 18. 103. ருக்மிணி, G., விசாலாக்ஷி, G., தண்டபாணி, G., மேட்டூர் அணை. 104. ராஜகோபாலன், கி., நாமக்கல். 105. ராஜலக்ஷ்மி, S., புதுக்கோட்டை. 106. ராகவன், V. S., ஸ்ரீசிவாசபுரம். 107. ரங்கராஜு, S., லக்ஷ்மிபுரம். 108. ராமசந்திரன், T. K., வைத்தியநாதன், T. K., தெப்பக்குளம். 109. ராமசாமி, B. V., நங்கவள்ளி. 110. ராமராஜ், N., ஆண்டிப்பட்டி. 111. ராமசாமி, P., ஆண்டிப்பட்டி.

★★★★★★★★★★ ★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★★★★★★

112. ராஜமாணிக்கம், T., ஆண்டிப்பட்டி. 113. ராஜகுரு, P., ஆண்டிப்பட்டி. 114. ராமையா, N., ஆண்டிப்பட்டி, 115. ரத்தினமூர்த்தி, K. K., உடுமலைப்பேட்டை. 116. ராதா, மஹேஷ், சொக்கிக்குளம். 117. ரங்கநாதன், R., ராயப்பேட்டை. 118. ரமணன், N., ஸ்ரீவில்லிபுத்தூர். 119. ருத் நல்லதம்பி, மேரிநல்லதம்பி, மதுரை. 120. ரகு, K., கல்யாண், பம்பாய். 121. ரங்கராவ், S., கல்கத்தா. 122. ராஜேசுவரி, A., வசந்தா, A., விஜயா, A., கொடுமுடி. 123. ரங்கையன், M., ஆண்டிப்பட்டி. 124. ராமமூர்த்தி, K., நங்கவள்ளி. 125. ராஜாபகதூர், ஆ. வெ. பெங்களூர். (S) 74. சங்கா செட்டி, R., குன்னூர். 75. செந்தில்வேல், திருநெல்வேலி. 76. சுப்பிரமணியன், R., குற்றாலம். 77. சத்தியவதி, C. V., சென்னை, 4. 78. ஸ்ரீராமலு, K. நுங்கம்பாக்கம். 79. சுந்தரராஜன், V. R., உடுமலைப்பேட்டை. 80. சுப்பிரமணியன், S., குன்னூர். 81. ஸ்ரீதரன், R., கும்பகோணம். 82. ஸ்ரீசிவாசன், A., சுப்புலக்ஷ்மி, A., திண்டுக்கல். 83. சரஸ்வதி பாய், B., குளித்தலை. 84. சுப்பையா, S. M., வேந்தன்பட்டி. 85. சண்முகவல்லி, R., எலமனூர், கொடியாலம். 86. சிவசங்கு, S., ஆண்டிப்பட்டி. 87. சுப்புராஜ், S., ஆண்டிப்பட்டி. 88 சுருளி, P., ஆண்டிப்பட்டி. 89. சக்கரபாணி, N. R., மணலூர்ப்பேட்டை. 90. சமரசநாதன், தெ., இளங்கோ, தெ., விக்டோரியா, தெ., வாணியம்பாடி. 91. சாரதா, N., மகாலிங்கம், N., புதுடில்லி. 92. செல்வநாயகம், ச., காரைநகர். 93. ஷண்முகம், K., கோயம்புத்தூர். 94. ஷாஹுல் ஹமீத், K., கோடைக்கானல். 95. சரோஜா, R., திருவாரூர்.

[மீதி அடுத்த இதழில் வரும்]

பவழவல்லி

கி. ரா.

7

அல்லிக் குளத்தில்—

சுந்தரம் அல்லிக் குளத்தை அடையும்போது சூரியன் உதயமாகும் சமயமாயிருந்தது. இவன் கீழே இறங்கியதும் ரதத்தை ஓட்டிவந்த சாரதி, "நீ திரும்பிப் போகும் போது என்னை நினைத்தால் நான் ரதத்தைக் கொண்டு வருவேன்" என்று சொல்லிவிட்டுத் தேரை ஓட்டிக்கொண்டு போய் விட்டான்.

சுந்தரம் சுற்றிலும் பார்த்தான். ஆமை சொன்னது நிஜந்தான். குளத்தங்கரையில் ஒரு பெரிய அரசமரம் இருந்தது. அதன் கிளையில் இரண்டு கூண்டுகள் தொங்கின. ஒன்று சாதாரணப் பிரம்புக் கூண்டு; இன்னொன்று கண்ணைப் பறிக்கும் தங்கக்கூண்டு. அதில் நவரத்தினங்கள் ஜொலித்தன.

அதே போலவே குளத்தின் நடுவில் ஒரு மைய மண்டபம் இருந்தது. அதன் உச்சியில் உட்கார்ந்திருந்தது அன்னப் பட்சி. சூரியவெளிச்சம் அதன் மேல் படப்பட அது பளபளவென்று மின்னிற்று. ஆஹா! அதுதான் எவ்வளவு அழகாயிருந்தது! உடல் முழுவதும் பொன்மயம். பாதங்களும் மூக்கும் மிட்டாயைப் போல் சிவப்பு. கண்விழிகள் இரண்டும் நீலவர்ணம். அப்படியே அதன் அழகைப் பார்த்துக் கொண்டே வெகு நேரம் நின்றான்.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது பறந்து வந்தது. அரசமரத்தைச் சுற்றிப் பறந்தது. கடைசியில் தங்கக் கூண்டின்மேல் வந்து உட்கார்ந்தது. அது அப்படிக் கைக்கு எட்டும் தூரத்தில் வந்து உட்கார்ந்ததும் சுந்தரம் ஓடிப் போய் எட்டிப் பிடித்தான். இதற்குள் அது இன்னொரு கிளைக்குப் போய் உட்கார்ந்து விட்டது. இப்படியே சுந்தரத்தை ஏமாற்றிக் கொண்டேயிருந்தது அது.

அந்தக் குளத்தங்கரை ஓரமாய் ஓர் உயரமான பூச்செடி இருந்தது. அந்தச் செடியின் மேல் போய் அது கடைசியில் உட்கார்ந்தது. சுந்தரமும் விடாமல் போய் அதைப் பிடிக்கத் தாவினான். பாவம், தாவும்போது அப்படியே வழுக்கிக் குளத்தில் விழுந்துவிட்டான்!

அந்தச் சமயத்தில் கீழே ஜலத்திலிருந்து ஒரு பெரிய முதலை பயங்கரமாக வாயைப் பிளந்து கொண்டு அவனை விழுங்கத் தயாராய் நின்றது! நல்லவேளை! அந்தப் பூச்செடியை அவன் இறுகப் பிடித்துக்கொண்டிராவிட்டால் நிச்சயமாய் முதலை

யின் வாய்க்குள் போயிருப்பான்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு அவன் கரையை அடைந்ததுந்தான் அவனுக்கு உயிர் வந்தது. அப்போது தான் ஆமை சொன்ன வார்த்தைகளை நினைத்தான்.

"குளத்தங்கரையில் நின்று நீ சொல்லியிருக்கும் மூன்று உண்மையான வார்த்தைகளை நினைத்துக்கொள். தங்க அன்னப் பட்சி நீ சொன்னபடியெல்லாம் கேட்கும்" என்று அது சொல்லிற்று அல்லவா?

கண்ணை மூடிக்கொண்டு யோசனை செய்து பார்த்தான். ஒரே ஓர் உண்மைதான் ஞாபகத்துக்கு வந்தது. பள்ளிக்கூடத்தில் நடந்தது. ஒரு சமயம் கணக்குப் பரீட்சை நடந்தது. இவனுக்குப் பக்கத்தில் அகிலாண்டம் என்று ஒரு பயல் உட்கார்ந்திருந்தான். அவன் சுத்த மக்கு. அவனுக்கு அவ்வளவு கணக்கையும் சொல்லிக் கொடுத்துவிட்டான். "அவனுக்கு யார் சொல்லிக் கொடுத்தது?" என்று வாத்தியார் கேட்டார். "நான்தான் ஸார்" என்று உண்மையைச் சொல்லி விட்டான். அதனால் அகிலாண்டத்துக்கு உதைகூட விழுந்தது.

இரண்டாவது உண்மை என்னவென்று வெகு நேரம் யோசனை செய்தபின் நினைவுக்கு வந்தது. உறியில் வைத்திருந்த குஞ்சாலாடுவை ஒரு நாள் எடுத்துவிட்டான். அம்மா எண்ணிப் பார்த்துவிட்டுப் பாலுவைக் கேட்டாள். உடனே இவன் உண்மையை ஒப்புக்கொண்டு விட்டான். அதை நினைத்துக்கொண்டான்.

மூன்றுவது உண்மை வேண்டுமே? என்ன யோசனை செய்தும் ஒன்றும் ஞாபகத்துக்கு வரவில்லை. தலையைத் தடவிக் கொண்டான். மூக்கைத் தேய்த்துக்கொண்டான். ஒன்றும் தோன்றவில்லை. ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். மேகங்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவைகளின் மேல் ஏறிக்கொண்டு போனுல் எப்படி இருக்கும் என்று நினைத்தான். அப்படியே வீட்டுக்குப் போய்விடலாம். வீட்டுக்குப் போனதும் அங்கச்சி ஓடிவருவாள். அவளிடம் தான் கண்ட அதிசயத்தையெல்லாம் கதையாகச் சொல்லலாம்.

"இதோ! ஞாபகம் வந்துவிட்டது! மூன்றுவது உண்மை: அங்கச்சி!"

அங்கச்சியைப் பற்றி நினைத்ததும் அவளுடைய பொம்மையை எடுத்து அழுக்குக் கூடைக்குப் பின்னுல் அவன் ஒளியவைத்தது ஞாபகத்துக்கு வந்தது. அன்று அப்பா, அம்மா எல்லோரும் பொம்மையை வீடு முழுவதும் தேடினார்கள். கடைசியில் வேலைக்காரிதான் எடுத்துக்கொண்டு போய்விட்டாள் என்று தீர்மானித்தார்கள். அப்போது அவன் தான் எடுத்ததாகக் கொண்டுவந்து கொடுத்தான். மூன்றுவது உண்மையும் சொல்லியாகிவிட்டது!

உடனே 'படபட'வென்று சத்தம் கேட்டது. அந்தத் தங்க அன்னம் அவன் தலைக்குமேல் பறந்துவந்து அவனுடைய

தோளில் 'ஜம்'மென்று உட்கார்ந்து கொண்டது. அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அதை எடுத்துத் தடவிக் கொடுத்தான்; கொஞ்சினான்; இறக்கையைப் பிடித்துத் தூக்கினான். இவ்வளவு அழகான பட்சியை யாராவது பார்த்திருக்கிறார்களா?

அடுத்தபடியாக அதைக் கூண்டுக்குள் அடைக்க வேண்டியது. சந்தோஷத்துடன் அதைக் காலைப் பிடித்துத் தூக்கிக்கொண்டே திரும்பிக் கூண்டுகளை நெருங்கினான். முதலில் அவன் கண்ணில் பட்டது தங்கக் கூண்டுதான். அப்போது அவனுக்கு ஓர் ஆசை தோன்றிற்று. அந்த அபூர்வப் பறவையைக் கொஞ்ச நேரம் பொன் கூண்டில் வைத்து அழகு பார்க்க வேண்டும் என்பதுதான் அது. ஒரு நிமிஷம் தங்கக் கூண்டில் வைத்துவிட்டு உடனே எடுத்துவிட்டால் என்ன ஆகிவிடும்?

பாவம், அதனால் வரும் ஆபத்து அவனுக்கு என்ன தெரியும்? தங்கக் கூண்டைத் திறந்தான். அன்னப் பட்சியை அதற்குள் விட்டுக் கதவை மூடினான். அந்தப் பறவை, "க்ரீ—ச்!" மூடினதுதான் தாமதம்! என்று பெரிய குரலில் கத்

திற்று! பயந்துபோன சுந்தரம் கூண்டை அவசர அவசரமாகத் திறந்தான். கதவு திறக்க முடியவில்லை. பாவம், அவன் என்ன செய்வான்! ஆனவரையில் மூச்சைப் பிடித்துக் கொண்டு இழுத்துப் பார்த்தான்; முடியவில்லை.

அப்போது, "யாரடா அங்கே?" என்று இடிமுழக்கம் போல் ஒரு குரல் கேட்கவே சுந்தரம் திரும்பிப் பார்த்தான். வானத்திற்கும் பூமிக்குமாக, கருமையான ஒரு பூதம் நின்றது. அதைக் கண்ட சுந்தரத்துக்குக் குலை நடுங்கிற்று.

அந்தப் பூதமனிதன் அப்படியே ஒரு கையால் சுந்தரத்தின் காதைப் பிடித்துத் தூக்கினான். இன்னொரு கையில் அந்தத் தங்கக் கூண்டுடன் அன்னப்பறவையைத் தூக்கிக் கொண்டான். அங்கிருந்து ஆகாயத்தில் தாவிப் பறந்து சென்றான். சுந்தரத்துக்குப் பயத்தால் உயிரே போய்விட்டது. கண்ணை இறுக மூடிக் கொண்டான்.

அவன் கண்ணைத் திறந்த போது அந்தப் பூத மனிதன் இருட்டாக இருந்த ஒரு குகையின் வழியாக உள்ளே நுழைந்தான். அந்த இருட்டில் சுந்தரத்தின் கண்ணுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

சற்று நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக எங்கிருந்தோ வெளிச்சம் வந்தது. பூதம் கரடுமுரடான ஒரு குகையின் வழியாகப் போய்க் கொண்டிருந்தது. வெகு நேரம் குகையின் வழியாகச் சென்றபின் சுந்தரம் ஒரு விசாலமான திறந்த வெளியை அடைந்ததை உணர்ந்தான். அங்கே நீல வெளிச்சம் பிரகாசமாய் இருந்தது. அந்த வெளிச்சத்தின் உதவியால் சுந்தரம் சுற்றிலும் நன்றாகப் பார்த்தான். நான்கு புறமும் ஒரே மலைப்பாறைகள். எங்கே பார்த்தாலும் விசித்திரமான செடிகொடிகள் அடர்ந்திருந்தன.

அந்த இடத்தை அடைந்ததும் சுந்தரத்தைத் தூக்கிவந்த பூதம் அவனைக் கீழே விட்டுவிட்டுத் திடீரென்று மறைந்து போய் விட்டது.

தனியே இருந்த சுந்தரம் பயத்துடன் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டே நடந்தான். தரையில் கல்லும் கட்டியும் நிறைந்து அவனுடைய கால்களில் குத்தின. எங்கும் பிரம்மாண்டமான தவளைகள் நிறைந்திருந்தன.

அப்படியே சற்றுத் தூரம் சென்ற சுந்தரம் திடீரென்று நின்றான். அவனுக்கு எதிரே ஒரு பயங்கரமான காட்சி தென்பட்டது. ஒரு பாறையின் மேல் ஒரு பெரிய முதலை கிடந்தது. அதன் மேல் கறுப்பு ஆடையணிந்த ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். அவனுடைய நீண்ட தாடியும், கூர்மையான விழிகளும் பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தன. அவனுடைய தலையில் ஒரு கோணலான குல்லாய் வைத்திருந்தான். எல்லாவற்றையும் விடப் பயங்கரம் என்னவென்றால் அவனுடைய தலைக்கு மேலே ஒரு பிரம்மாண்டமான

கருநாகம் குடை பிடித்துக் கொண்டிருந்தது. அந்த நாகத்தின் தலையில் இருந்த நீல மணியின் பிரகாசம் கண்ணைக் கூசவைத்தது. அந்த மணியின் நீலமயமான ஒளிதான் அந்தப் பிரதேசம் முழுவதற்கும் வெளிச்சம் தந்தது என்பதைச் சுந்தரம் பிறகு உணர்ந்தான்.

சுந்தரம் நின்றதைக் கண்ட அந்தப் பயங்கரக் கிழவன் 'கட கட'வென்று சிரித்துவிட்டுப் பிறகு சொன்னான்: "டேய்! மானிடப் பயலே! உனக்கு எவ்வளவு திமிர்? என்னுடைய முதலைக் குளத்துக்கு வந்து, என்னுடைய அன்னப்பட்சியைத் தூக்க உனக்கு எவ்வளவு துணிச்சல்! ஹ-ஹ-ஹா!"

அவனுடைய குரல் வெண்கலத்தைத் தட்டுவது போல் ஒலித்தது. கேட்பதற்கு விசித்திரமாயும் பயங்கரமாயும் இருந்தது.

மேலும் கிழவன் பேசினான்: "நான் யார் தெரியுமா? இந்த முதலைத் தீவின் அதிபதி; மாயாஜால மந்திரவாதி! உன்னை அப்படியே சாம்பலாக்கிவிட என்னால் முடியும். ஆனால் சின்னப் பையனாய் இருக்கிறாய். உன்னை ஒரு கிளியாகச் செய்தால் என் பெண் வைத்துக் கொண்டு விளையாடுவாள். இதோ பார்!"

இவ்விதம் சொல்லிக்கொண்டே தன் கையில் இருந்த மந்திரக் கோலை மூன்று தடவை சுழற்றினான்; அவ்வளவுதான்! படீரென்று ஒரு சத்தம் கேட்டது. சுந்தரம் அப்படியே ஒரு கிளி உருவடைந்தான்!

மறுகணமே, "சஞ்சலா!" என்று கூவினான் மந்திரவாதி. "ஏன் அப்பா!" என்று கேட்டுக்கொண்டே ஓர் இளம் பெண் வந்தாள்.

கிளி உருவில் இருந்த சுந்தரம் பரிதாபத்துடன் அவளைப் பார்த்து விழித்தான்.

(தொடரும்)

பொம்மையின் கல்யாணம்

'சூடாமணி'

மண்ணுங் கட்டிப் பெண்ணுக்குக்
கண்ணுலம் பண்ணி வைக்க
மண்ணுலே வீடு கட்டிநல்ல
மணப் பந்தலுந்தான் போட்டுவிட்டார்.
மண்ணுங் கட்டிப் பெண்ணுக்கு
மாவிலைக் கூறைச் சேலையாம்.
மண்ணுங் கட்டி மாப்பிள்ளைக்கு
மாவிலைதான் பட்டுச் சோமனும்.
பண்ணி விட்டோம் குருத்தோலைப்
பொன் நகையும் தாலி நூலும்.
மண்ணுங் கட்டிப் பெண் அழகைக்
கண் ஆயிரம் காணவேணுமே.
மண்ணுங்கட்டிப் பெண்ணுக்கு
மண்ணுங்கட்டி மாப்பிள்ளை
மாலையிட்ட வேளையிலே
மணக்கோலம் காணவேணும்.
கொட்டுமேளம் குணுகுணுக்க
பட்டுஉடுத்த பெண்களும்,

தட்டுத் தட்டாய்ச் சீதனங்கள்
தாங்கிவந்து வரிசையிட்டார்.
மண்ணாங்கட்டி அடுப்பெரிய
மணலும் நல்ல சோருச்சு.
மாவிலைக்காம்பு கறியாச்சு
மணப்பந்தலில் இலை போட்டாச்சு.
சிரிப்புப்பேச்சும் கலகலக்கச்
சிறந்தபந்தி போஜனமாம்.
மணவிருந்து வேளையிலே
மண்ணாங்கட்டிப் பெண்முகத்தைக்
கண்ணாலே பார்த்துவிட்டார்
மண்ணாங்கட்டி மாப்பிள்ளை.
மண்ணாங்கட்டி மாப்பிள்ளை
மணல்சோற்றைத் தின்னவில்லை.
மணவிருந்துக்கு இருந்தவர்கள்
மளமள என்று எழுந்துவிட்டார்.
பண்ணுதகேலி பண்ணிவிட்டார்;
பந்தலைவிட்டு ஓடிவிட்டார்;
உண்ணுதசோறு மலைபோலே!
உண்ணவருவார் யாருமில்லை!



அட்டைத் துப்பாக்கி

தேவையானவைகள்:— இரண்டு கெட்டியான அட்டைகள்; ஒரு நீண்ட ரப்பர் துண்டு; 3 குண்டூசிகள்; கொஞ்சம் நூல்.

படத்திலுள்ள துப்பாக்கியைப் போல ஓர் அட்டையின் மீது வரைந்து 2 துண்டுகள் வெட்டியெடுங்கள் படம் 2 - இல் காட்டியபடி ஒரு குதிரையை வெட்டி எடுங்கள். இது கொஞ்சம் கெட்டி அட்டையாக இருக்க வேண்டும். படத்தில் காட்டியபடி குண்டூசிகளைக் குத்தி மடக்கிவிட வேண்டும். ஒரு லேசான அட்டையில் வட்டங்கள் பல வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். இவை தான் குண்டுகள். இதைப் படத்தில் காட்டியபடி மேலாக வைக்க வேண்டும்.

(அ) இப்படிக் காட்டியிருப்பவை எல்லாம் குண்டூசிகள் குத்தி மடக்கி விட்ட இடங்கள். குதிரையில் (O) இதுபோல் மிகவும் சிறியதாகக் காட்டிய இடத்தில் துவாரம் செய்யவேண்டும்.

படம்: (3) இதில் குதிரையை இரண்டு அட்டையின் நடுவில் வைத்துக் குண்டூசியால் குத்தி மடக்கிவிடவேண்டும். (ஆ) ரப்பரை, படத்தில் காட்டிய இடத்தில் முடிபோட்டுக் கட்டி விடவேண்டும்; அட்டைக் குண்டை இரண்டு அட்டையின் நடுவில் மேலாகச் செருக வேண்டும். ரப்பரின் பின்னால்தான் குதிரையை வைக்கவேண்டும்

பின்பு குதிரையைத் தள்ளினால் ரப்பர் நகர்ந்து அந்த வட்டமான அட்டைக் குண்டைத் தள்ளும் உடனே குண்டு முன்னால் போய் விழும். ரப்பர் நீளம் சுமார் $4\frac{1}{2}$'' இருந்தால் போதும். துப்பாக்கிக்குக் கறுப்புக் கலர் கொடுத்துவிட்டால் நிஜத் துப்பாக்கிபோலவே இருக்கும்.



'கக்கூ விளையாட்டு'

'சுண்டு'

சிறுவர்களுக்கு விளையாட்டு என்றால் கன குஷி! சாப்பாடு கூட அப்புறந்தான். ஏன் தெரியுமோ? விளையாட்டில் தேகப் பயிற்சி, மனசுக்குக் குதூகலம், விசேஷத் திறமை எல்லாம் கலந்து இருப்பதனுல்தான். அப்படிப்பட்ட விளையாட்டில் இதுவும் ஒன்று. 8 வயது முதல் பெரிய பையன்கள்கூட இதில் கலந்துகொள்ள லாம். விளையாடுபவர் மொத்தம் இரட்டைப் படை எண்ணிக்கையாக இருக்க வேண்டும். குறைந்தது 12 பேர்களாவது இருந்தால்தான் ஆட்டம் சுவாரஸ்யப்படும்.

ஆட்டத்தில் கலந்துகொள்பவர்கள் முதலில் இரண்டு கட்சியாகப் பிரிந்துகொள்ள வேண்டும். பிறகு கோழிமுட்டை வடிவில் ஒரு பெரிய வட்டக் கோடு போட்டுக்கொள்ள வேண்டும். நடுவில் 32 அடிக்குக் குறையாத ஒரு நேர்க் கோடு கிழித்துக்கொண்டு அதில் ஒரு கட்சியினர் மாற்றி மாற்றி உட்கார வேண்டும். அவர்கள் கையை நீட்டினுல், அவர்களுக்கு இடையில் ஓர் அடி இடைவெளி யாவது இருக்க வேண்டும்.

உட்கார்ந்திருக்கும் கட்சியில் ஒருவன் மட்டும் ஒரு கோடியில் நிற்பான். அவன் பெயர் 'ரன்னர்'. எதிர்க்கட்சியினர் வட்டத்துக்குள் நிற்பார்கள். 'ரெடி!' என்று ரன்னர் எச்சரிக்கை கொடுப்பான். பிறகு, 'கக்கூ' என்று கூவிக்கொண்டே அவன் எதிர்க் கட்சியினரைப் பிடிக்க ஓடுவான். வட்டத்தினுள் அவர்கள் அவன் கையில் சிக்காதபடி ஓடவேண்டும். ரன்னர் ஒரே திசையில்தான் ஓட வேண்டும். திரும்பி ஓடி வரக்கூடாது. ஆனுல் எதிர்க் கட்சியினர் உட்கார்ந்திருப்பவர்களுக்கு நடுவில்கூடப் பாய்ந்து செல்லலாம். உட்கார்ந்திருக்கும் கட்சியினர் கையால் தொட்டுவிட்டால் அவர்கள் 'அவுட்' ஆகிவிடுவார்கள். வெளியில் போய்விடவேண்டும். ரன்னர் ஓடிக் களைத்துவிட்டால் அவன் ஒரு பையனுடைய இடத்தில் உட்கார்ந்துகொண்டு அந்தப் பையனை ரன்னராக ஓடச் செய்யலாம். எல்லாரும் பிடிபட்டு விட்டால் ஆட்டம் முடிந்துவிடும். பிறகு எதிர்க் கட்சிக்காரர்கள் உட்காருவார்கள். இந்த ஆட்டத்துக்கு ஸ்கோர், பந்தயம் எது வேண்டுமானுலும் வைத்து விளையாடலாம். ஒரு தரம் இந்த ஆட்டத்தை விளையாடினுல் பிறகு இதை லேசில் விடமாட்டீர்கள். அவ்வளவு குஷியாக இருக்கும்!

மௌலானா அபுல்கலாம் ஆஸாத்

கி. வா. ஜகந்நாதன்

மகாத்மா காந்தி எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருந்தார். எல்லா ஜனங்களிடத்திலும் அன்பாக இருந்தார். ஆனாலும் அவருக்குச் சில பேரிடத்தில் அதிக அன்பும் மதிப்பும் உண்டாயின. அவர்களோடு அதிகமாகப் பழகினார். அப்படிப்பட்டவர்கள் வரிசையில் மௌலானா அபுல்கலாம் ஆஸாதும் ஒருவர். இப்போது அவர் பாரத நாட்டின் கல்வி மந்திரியாக இருப்பது உங்களுக்குத் தெரியுமே! கல்வி கற்கும் நீங்கள் கல்வி மந்திரியைக் குறித்து அதிகமாகத் தெரிந்துகொள்வது நல்லதுதானே?

இப்போது மௌலானா ஆஸாதைப் பார்த்தால் மிகவும் சாதுவாகத் தோன்றுகிறார். இளமையிலேயே - அதாவது மகாத்மா காந்தி சுதந்தரப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே - பிரிட்டிஷ்காரர்கள் இவரை ஆபத்தான மனிதர் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

அபுல்கலாம் என்பது இவருடைய பெயர். மௌலானா என்றால் தலைவர் என்று பெயர். பொதுஜனங்கள் அன்புடன் அளித்த பட்டம் அது. ஆஸாத் என்றால் சுதந்தரம் என்று அர்த்தம். இவர் சின்ன வயசிலேயே கவிதையும் கட்டுரையும் எழுதி வந்தார். அப்போது 'ஆஸாத்' என்ற புனை பெயரோடு எழுதி வந்தார். அது பிறகு இவருடைய சொந்தப் பெயரோடு ஒட்டிக் கொண்டது.

மௌலானா அபுல்கலாம் ஆஸாதின் தகப்பனார் முகம்மத் கைருதீன் பெரிய படிப்பாளி. இஸ்லாம் மத சம்பந்தமாகப் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவர் மத குருவாக

211777

இருந்தார். அவருக்கு ஆயிரக் கணக்கான சிஷ்யர்கள் இருந்தார்கள்.

முகம்மத் கைருதீன் டில்லியில் இருந்துவந்தார். 1857-ஆம் வருஷம் இந்தியாவில் ஒரு சுதந்தரப் போர் நடந்தது. அதை வெள்ளைக்காரர்கள் "சிப்பாய்க் கலகம்" என்று சொல்வார்கள். புரட்சிக்காரர்களையெல்லாம் அப்போது பிரிட்டிஷார் சிறிதும் இரக்கம் இல்லாமல் கொன்றனர்; அந்தக் காலத்தில் ஆஸாதின் தந்தை அங்கே இருக்க மனம் இன்றி அரேபியாவுக்குச் சென்ருர். முகம்மதியர்களின் புனித ஸ்தலமாகிய மெக்காவில் தங்கி வாழ்ந்து வந்தார். ஒரு பெரிய படிப்பாளியின் பெண்ணை அங்கேயே கல்யாணம் செய்துகொண்டார்.

1888-ஆம் வருஷம் அபுல் கலாம் ஆஸாத் மெக்காவில் பிறந்தார். 1898-ஆம் வருஷம் இவர் தகப்பனுர், தம் சிஷ்யர்கள் வேண்டுகோளுக்கு இணங்கக் குடும்பத்துடன் இந்தியாவுக்கே வந்துவிட்டார். கல்கத்தாவில் வசிக்கலானுர்.

ஆஸாதின் தந்தைக்கு வெள்ளைக்காரர் நாகரிகத்தைக் கண்டால் அருவருப்பு. இங்கிலீஷ் பாஷையில்கூட அவருக்கு வெறுப்புத்தான். அவர் வீட்டில் எல்லாம் பழைய பாணியில்தான் இருக்கும். கீழே பாயை விரித்துத்தான் உட்காருவார். மேஜை, நாற்காலி இல்லை. ராஜா வந்தாலும் சரி, மந்திரி வந்தாலும் சரி, அந்தப் பாயில்தான் உட்காரவேண்டும். தம் பிள்ளையை அவர் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லை. தாமே அரபு பாஷையையும் பர்ஸிய மொழியையும் சொல்லிக் கொடுத்தார். வேறு வாத்தியார்களையும் கொண்டு கற்பிக்கச் செய்தார்.

ஆஸாதின் தாயார் அரேபியாவில் பிறந்தவர். அவர் தாய் மொழி அரபு பாஷை. தகப்பனுரோ இந்தியர். அவர் தாய் மொழி உருது. ஆகவே இரண்டு பாஷைகளிலும் ஆஸாதுக்கு அறிவு இயற்கையாகவே அதிகமாக இருந்தது. அரபு பாஷையிலேயே கணிதம், தர்க்கம், பூகோளம், சரித்திரம் முதலிய எல்லாப் பாடங்களையும் இவர் கற்ருர். இவர் கற்ற கல்வித் திட்டம் பழமையானது. சாமானிய மாணுக்கனுக இருந்தால், அந்தத் திட்டத்தின்படி கற்றுத் தேர்ச்சிபெற 14 வருஷங்கள் ஆகும். கெட்டிக்காரப் பையனுக இருந்தால், 10 வருஷங்களில் படிக்கலாம். ஆனுல் ஆஸாத் படித்த வேகம் இந்தக் கணக்கில் அடங்கவே இல்லை. அதைச் சொன்னுல் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். நாலே வருஷத்தில் அந்தப் படிப்பைப் படித்துவிட்டார்.

இதுமட்டும் அல்ல. தாம் பாடம் கேட்பதோடுகூடச் சில

ருக்கு ஆஸாத் அந்தச் சிறு வயசிலேயே ஆசிரியராகவும் இருந்தார். இவருக்கு அப்போது வயசு பதினலு. இவரிடம் பாடம் கேட்டவர்களில் தாடிக்காரப் பட்டாணியர் ஒருவர். அவர் ஆஸாதுக்கு மாணுக்கர்! வயசான பிறகு மூளையில் விஷயம் சுலபத்தில் ஏறுமா? அந்த மாணுக்கர் கொஞ்சம் நிதானமான பேர்வழி. ஒரு நாள் தர்க்கத்தில் ஒரு பகுதியை ஆஸாத் விளக்கினர். அந்தத் தாடிக்கார மாணுக்கருக்கு அது விளங்கவில்லை. பல உதாரணங்களைச் சொல்லித் தொண்டைத் தண்ணீர் போக விரிவாகச் சொன்னர். ஊஹூம்; அவர் மூளையில் ஏறவே இல்லை. ஆஸாதுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஓய்! உமக்கு மூளை களிமண்ணல் செய்திருக்கிறது. அதில் இந்தப் படிப்பெல்லாம் ஏருது. பேசாமல் வீட்டுக்குப் போய் மாட்டோடு மாடாக இருந்து புல்லைத் தின்னும். அதற்குத் தான் லாயக்கு" என்று சொல்லிப் புத்தகத்தை அவர் மூஞ்சியில் எறிந்தார். பாவம்! அந்த மனிதர் வாயையே திறக்கவில்லை. 'நாம் இப்படி இருக்கிருேமே!' என்று வருந்தி அன்று சாப்பிடாமல் பட்டினியாகவே இருந்தார்.

இந்தச் சமாசாரம் ஆஸாதின் அப்பாவுக்குத் தெரிந்தது. "உனக்குக் கொஞ்சங்கூடப் புத்தி இல்லை. உன் வயசென்ன? அவர் வயசென்ன? போய் முதலில் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவரைச் சாப்பிடும்படி செய்துவிட்டு வா" என்று கடிந்துகொண்டார்.

ஆஸாத் பட்டாணியர் வீட்டுக்குப் போய், தம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். அவரோ, "நீங்கள் எனக்கு வாத்தியார். என்னைக் கண்டிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் என்னிடம் மன்னிப்பைக் கேட்க நியாயமே இல்லை. என் மூட்டாள்தனத்தை நீங்கள் எடுத்துக் காட்டுவது எனக்குத் தானே நல்லது?" என்று சொன்னர். கடைசியில் ஆஸாத் அவரைக் கெஞ்சிச் சாப்பிடச் செய்துவிட்டுத் தான் வீடு திரும்பினர்.

மௌலான ஆஸாத் 1905-ஆம் வருஷம் முதல் 1907-ஆம் வருஷம் வரையில் எகிப்தில் உள்ள கெயிரோ சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றுர். இளமையிலே இங்கிலீஷ் படியாமற் போனலும் பிற்காலத்தில் இவராகவே படித்துக் கொண்டார். மிகவும் சிறந்த ஆங்கில இலக்கியங்களைப் படித்து உணர்ந்தார். இவரிடம் இப்போது இருக்கும் ஆங்கில நூல்கள், இந்தியாவில் வெகு சிலரிடமே இருக்கக் கூடும்.

ஆஸாத் மிகவும் சிறிய வயசிலேயே கவிதை எழுதத்

தெரிந்துகொண்டார். 14 வயசு நடந்து கொண்டிருந்தபோது இவர் கவிதைக்காகவே 'நேரேஞ்ஜ் ஆலம்' என்ற உருதுப் பத்திரிகையை நடத்தி வந்தார். இளங்கவிஞர்களெல்லாம் அதில் கவிதைகளை எழுதினர்கள்.

அவ்வப்போது கவி சம்மேளனம் நடைபெறும். பல கவிஞர்கள் கூடுவார்கள். கரடுமுரடான எதுகைகளை வைத்துப் பாடும்படி அவர்களுக்குச் சொல்வார்கள். இன்ன இன்ன வார்த்தைகளை இப்படி இப்படி வைத்துப் பாடவேண்டும் என்பார்கள். அப்படிப் பாடியவர்களுக்குள் கெட்டிக்காரருக்குப் பரிசு வழங்குவார்கள்.

இந்தச் சம்மேளனங்களுக்கு ஆஸாத் போவார். அவர்கள் போடும் நிபந்தனைகளின்படி பாட்டுப் பாடிக் காட்டுவார்; பரிசைத் தட்டிக்கொண்டு போவார். சபையில் உள்ளவர்கள், "இந்தச் சிறு பையன் இவ்வளவு கடினமான பாடல்களைப் பாடுகிருனே; இவனால் முடியுமா?" என்று சந்தேகித்தார்கள். நாதிர் கான் என்ற பெரிய கவி, 'இந்தப் பிள்ளையாண்டானுக்குப் பெருமை உண்டாக வேண்டும் என்று யாரோ மறைவாக இருந்து சொல்லிக் கொடுக்கிருர்கள். இல்லாவிட்டால், இந்தப் பையனுவது, இந்தப் பாட்டைப் பாடவாவது! எவ்வளவு நாளைக்கு இந்தத் திருட்டு நடைபெறும்? நான் ஒரு நாள் கண்டுபிடித்து விடுவேன்' என்று மனசுக்குள் எண்ணியிருந்தார். ஆம்; அவர் கண்டுபிடித்து விட்டார். எப்படித் தெரியுமா? அந்த வேடிக்கையைக் கேளுங்கள்:

ஒரு நாள் ஆஸாத் ஒரு புத்தகக் கடையில் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். புத்தகப் பைத்தியம் அல்லவா? அப்போது அந்த வழியாகப் போன நாதிர் கான் ஆஸாதைப் பார்த்தார். 'இந்தப் பையன் வண்டவாளத்தை இப்போது தெரிந்துகொள்ளலாம்' என்று எண்ணி அந்தக் கடைக்குள் போனுர். "ஏ பையா, கவி சம்மேளனத்தில் நீ பல கவிகளைச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அவைகளெல்லாம் நீயே இயற்றியவை என்று எப்படிச் சொல்வது? நீ உண்மையிலே கவி இயற்றும் சாமர்த்தியம் உடையவனுக இருந்தால், இப்போது அதைக் காட்டு, பார்க்கலாம். 'யாத் நஹோ, ஷாத் நஹோ, அபாத் நஹோ'--இவைகளை வைத்துப் பாடு பார்க்கலாம்" என்ருர். பையன் பல்லைக்காட்டிப் பரக்க விழிப்பான் என்று அவர் எதிர்பார்த்தார்.

ஆஸாதுக்கு ரோசமாக இருந்தது. அந்த ரோசம் அவருடைய சக்தியைத் தூண்டி விட்டது. சடசடவென்று

கவிதையைச் சொல்ல ஆரம்பித்தார். நாதிர் கான் பிரமித்துப் போனார். "ஹாஹா ஹா!" என்று கூத்தாடினார். அவ்வளவு பேருக்கு நடுவில் தம்முடைய அறியாமையை ஒப்புக்கொண்டார். "உண்மையில் நீ சிறந்த கவி, அப்பா! நான் இதுவரையில் நம்பவில்லை. எல்லாம் ஏமாற்றமென்று நினைத்தேன். நீ மகா கெட்டிக்காரன். எத்தனையோ பேர் கவி பாடுகிறார்கள். ஆனாலும் உனக்குச் சமானமாகச் சிலரே இருக்கக்கூடும். நீ தீர்க்காயுசாக வாழவேண்டும்" என்று ஆசீர்வாதம் செய்தார்.

பதினாலு பதினைந்து வயசிலே 'லிஸானஸ் ஸிதிக்' என்ற பத்திரிகை ஒன்றை இவர் நடத்தி வந்தார். 'உண்மை வாக்கு' என்பது அதன் பொருள். அதில் எல்லாவிதமான விஷயங்களையும் பற்றி அலசி வந்தார். அதன் ஆசிரியர் யாரோ நிரம்பப் படித்த பெரியவர் என்று பலர் எண்ணிக்கொண்டிருந்தார்கள். க்வாஜா அல்டாப் ஹூஸேன் ஹாலி என்ற பெரிய உருதுப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் ஸர் ஸையத் அகமத்கான் என்பவருடைய சரித்திரத்தைப் புத்தக உருவில் எழுதினார். அதைப்பற்றி ஒரு விரிவான மதிப்புரையை ஆஸாத் தம் பத்திரிகையில் வெளியிட்டார். சிறிதும் ஒளிவு மறைவில்லாமல் நூலிலுள்ள குற்றங்களையும் குறைகளையும் எடுத்துக் காட்டி அந்த மதிப்புரையை எழுதியிருந்தார். அதைப் பலர் படித்துப் பார்த்தார்கள். பாராட்டினார்கள்; பலர் குறையும் கூறினார்கள். பலருடைய கவனத்தை அது கவர்ந்ததானாலும் அவர்களுக்கு ஆஸாத் இன்னாரென்றே தெரியாது. இவர் பதினாலு வயசுப் பையன் என்பது அடியோடு தெரியாது.

லாகூரில் ஒரு பெரிய சங்கம் இருந்தது. 1904-ஆம் வருஷம் அதன் ஆண்டு விழாவில் பேசுவதற்கு ஆஸாதை அழைத்தார்கள். இவரை நேரில் அறியாவிட்டாலும் 'லிஸானஸ் ஸிதிக்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்ற புகழ் ஏற்பட்டிருந்தது. ஆஸாதுக்குச் சிறிய கூட்டங்களில் பேசும் பழக்கம் இருந்தது. ஆனாலும் அதைப் போன்ற சபையில் பேசியதில்லை.

இவர் பேசவேண்டிய விஷயமோ வயசில் முதிர்ந்த பெரியவர்கள் பேசுவதற்குரியது. "சமயத்துக்குப் பகுத்தறிவு ஆதாரம்" என்பதுதான் அந்த விஷயம். பெரிய சபை. கவிஞர்களும் பேரறிஞர்களும் எழுத்தாளர்களும் கூடியிருந்தனர். பெரிய கவிஞராகிய இக்பால் கூட்டத்துக்கு வந்திருந்தார். எந்தப் புத்தகத்துக்குத் தயை தாட்சிண்யமின்றி ஆஸாத் மதிப்புரை எழுதியிருந்தாரோ அந்

தப் புத்தகத்தின் ஆசிரியராகிய ஹுஸேன் ஹாலியும் வந்திருந்தார்.

பிரசங்கம் செய்வதற்குமுன் சங்கத்தினர் இவரைக் கூட்டத்துக்கு அறிமுகம் செய்து வைத்தனர். 'இந்தப் பிள்ளையாண்டானா பேசப்போகிறான்? அதுவும் இந்த நுணுக்கமான விஷயத்தைப் பற்றியா!'' என்று ஆச்சரியப்பட்டார்கள். ஹுஸேன் ஹாலி, "பத்திரிகாசிரியராகிய மௌலானா அபுல்கலாம் ஆஸாத் வரவில்லைபோல் இருக்கிறது. இவர் அவருடைய பிள்ளை போலும்'' என்று நினைத்திருந்தார். ஆனால் உண்மை தெரிந்தபோது அவருக்கு உண்டான ஆச்சரியத்துக்கு எல்லை இல்லை. "இந்தச் சிறுவனா என் புத்தகத்துக்கு அவ்வளவு விரிவான மதிப்புரை எழுதினான்!'' என்று இவரைப் பார்த்துப் பார்த்து வியந்தார். ஆஸாத் பேச ஆரம்பித்தார். அந்த நுணுக்கமான விஷயத்தைப் பேச இவர் எவ்வகையிலும் தகுதியுள்ளவர் என்பதைக் காட்டினார். குரானிலும் மற்ற மத நூல்களிலும் இவருக்கு எவ்வளவு ஆழமான அறிவு இருக்கிறதென்பதைக் கூட்டத்தினர் அறிந்து ஆச்சரியப்பட்டனர். ஹுஸேன் ஹாலி அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு அப்படியே சொக்கிப் போய், "சின்ன உடம்பில் பெரிய மூளை'' என்று பாராட்டினார்.

வரவர நம் நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதை ஆஸாத் உணரலானார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அக்கிரமங்களைக் கண்டு அவருக்குக் கோபம் கோபமாக வந்தது. 1912-ஆம் வருஷம் 'அல் ஹிலால்' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். மிகவும் காரசாரமாக எழுதி வந்தார். அந்த வாரப் பத்திரிகைக்கு வரவர ஆதரவு அதிகமாயிற்று. முதலாவது உலக யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இவரைப் பாதுகாப்பில் வைத்தார்கள். 1920-ஆம் வருஷம் வரையில் இவர் சிறையில் இருந்தார். பிறகு விடுதலை பெற்றார்.

பிறகு மகாத்மா காந்தியுடன் சேர்ந்து இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டார். காங்கிரஸ் மகா சபையின் தலைவராக இரண்டு தடவை இருந்திருக்கிறார். மகாத்மா காந்திக்கு இவரிடத்தில் தனி மதிப்பு இருந்தது.

இன்று ஆஸாத் இந்தியாவை அரசாட்சி செய்யும் தலைவர்களில் ஒருவர். மகா மேதாவி. பல நூல்களுக்கு ஆசிரியர். இஸ்லாம் மத சம்பந்தமான விஷயங்களில் இவர் பெரிய நிபுணர். சின்ன வயசிலே அறிவிலும் தேசபக்தியிலும் பழுத்திருந்த இவர் இன்று சுதந்தர பாரதத்தின் கல்வி மந்திரியாக இருப்பது எவ்வளவு பொருத்தமானது!

முயல் - - - - - - தி.ஜ.ர.

காட்டிலே ஒரு புல்தரை இருந்தது. பசுமையான புல் தரை. இள இள என்று புல் வளர்ந்திருந்தது. புல்லில் பனி ஒட்டிக்கொண்டிருந்தது. சின்னக் கண்ணாடிப் பாசி மணிகளைக் கோத்தால் எப்படி இருக்கும்? அந்த மாதிரி இருந்தது பனி. அது கண்ணாடிப் பட்டுப்போல் இருந்தது. அதை ஒரு முயல் வந்து குடித்தது. அதற்கு ரொம்பவும் தாகம். பக்கத்திலே வேறு தண்ணீர் கிடையாது. முயலுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும்? கொஞ்சம் இருந்தால் போதும்.

அந்த முயலுக்குத்தான் என்ன பயம்? அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டே பனியைக் குடித்தது. கணத்துக்கு ஒரு தடவை காதை நெரித்தது. ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கவனித்தது. நல்ல வேளை; சத்தம் ஒன்றும் கேட்கவில்லை. பனி முழுவதையும் முயல் குடித்தது. தாகம் தீர்ந்தது. பிறகு, ஓட்டமாய் ஓடியது. நாலு கால் பாய்ச்சல்தான்.

டாக், டாக், டாக், டாக்!

ஒரே ஓட்டம். குதித்துக் குதித்து ஓடியது. நடுநடுவே குட்டிக்கரணங்களும் போட்டது. ஆஹா! அது எவ்வளவு அழகாயிருந்தது!

முதுகு செம்பழுப்பு நிறம். அதிலே சில சிறு கறுப்புப் புள்ளிகள். பிடரி 'வெல்வட்' மாதிரி கறுப்பு. காதுகளின் உட்புறம் வெண் பழுப்பு; பின்புறம் சாம்பல் நிறம்; அடிப்புறம் கறுப்பு; மேல் முனை வெண்மை. அடிக் கழுத்துச் சிறிது மஞ்சள். மோவாயும் வயிறும் வெண்மை. வால் சாம்பல் கறுப்பும் மஞ்சளும் பழுப்பும் வெண்மையும் கலந்திருந்தது.

டாக், டாக், டாக், டாக்!

அதிவேகமாய் ஓடியது முயல். சீமை முயலைவிட அதிக வேகமாய் ஓடக்கூடியது நம் நாட்டு முயல்.

இந்த முயல் ஒரு புதருக்குள் போயிற்று. அங்கே ஒரு சின்னக் குழி இருந்தது. அதில் ஒரு முயல் குட்டி இருந்தது. இந்த முயலின் குட்டிதான் அது.

குட்டிக்குத் தாய் முயல் கொஞ்சம் பால் கொடுத்தது. அதைக் கொஞ்சியது. பிறகு போய்விட்டது. தாய் முயல் எப்போதாவது வரும். பால் கொடுத்துக் கொஞ்சும். போய் விடும். குட்டியை அதிகமாகக் கவனிப்பதில்லை. இது முயல்களுக்கே வழக்கம்.

முயல் மூன்று முதல் ஆறு குட்டிகள் போடும். இந்தக் குட்டியோடு இன்னும் இரண்டு குட்டிகள் பிறந்தன. ஒரு குட்டியைக் காட்டுப் பூனை தின்றுவிட்டது. ஒரு குட்டியை ஆந்தை கொத்திக் கொண்டு போய்விட்டது. இந்தக் குட்டிதான் மிச்சம்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் தாய் முயல் வரவேயில்லை. தனியே அநாதைபோல வாழ்ந்தது குட்டி முயல். அதைப் பாதுகாத்து வளர்க்கத் தாயுந்தான் வரவில்லையே!

இதனால்தானோ என்னவோ, முயல் குட்டிகளுக்கு, பிறக்கும் போதே நாலு வரங்களை இயற்கைத் தாய் கொடுத்திருக்கிறாள். பிறர் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் உடம்பு; சிறு ஒலியையும் கேட்கக்கூடிய காது; நீண்ட

தூரம் தாவக்கூடிய கால்; வலம், இடம், முன்னே, மேலே எங்கும் ஒரே சமயத்தில் பார்க்கக் கூடிய கண். இந்த நாலுந்தான் அந்த வரங்கள்.

புதரிலே முயல் ஒளிந்து கொள்ளும். அப்போது வெளியே தெரியாது. புதரோடு புதராக இருக்கும். அதன் உடம்பு ரோமமும் புதரும் ஒரே நிறமாயிருக்கும். வித்தியாசம் தெரியாது. முயல் இருப்பதை யாரும் காண முடியாது.

பக்கத்திலே புஸ் புஸ் என்று ஈசல் ஒலிக்கும். தூரத்திலே டாண் டாண் என்று கோயில் மணி அடிக்கும். குளக்கரையில் கரா முரா கரா முரா என்று தவளை கத்தும். தண்டவாளத்திலே குப் குப் என்று ரெயில் வண்டி ஓடும். ரஸ்தாவிலே பூம் பூம் என்று கார் இயங்கும். மேலே ஞொய் ஞொய் என்று கருடன் கூவும். வானத்தில் குர்ர்ர் டுர்ர்ர் என்று விமானம் பறக்கும். ஒரு பக்கம் லொள் லொள் என்று நாய் குரைக்கும். இன்னொரு பக்கம் மியா மியா என்று பூனை கத்தும். இத்தனை சத்தமும் முயலின் காதில் கேட்கும். சுற்றி லும் ஒரு மைலுக்குள் உண்டா கும் எந்தச் சத்தமும் கேட்கும், இது பகைவனின் சத்தம், இது நண்பனின் சத்தம் என்று பாகு படுத்தி முயல் அறிந்துகொள் ளும்.

முயலின் முன்னங்கால் நீளம் பின்னங்கால் குட்டை. காலடியி ரோமம் அடர்ந்து மிருதுவாயிரு கும். இதனால் முயல் குதித்து குதித்து வெகு வேகமாய் ஓடு உலகத்திலேயே வேகத்தி அதற்கு இணை வேறு பிரா இல்லை. அது ஓடும்போது தடியே கேட்காது.

முகத்தின் மேல் புறத் இருக்கிறது முயலின் க பட்சிகளுக்கு அமைந்திருப் போல் அமைந்திருக்கி பெரிய கண். நாம் முன் நோக்கினால் முன் புறம் தெரி வலது புறம் நோக்கினால் வ புறம் தெரியும். இடது

நோக்கினால் இடது புறம் தெரியும். அண்ணாந்து நோக்கினால் மேலே தெரியும். முயலுக்கோ ஒரே சமயத்தில் இந்த எல்லாப் பக்கங்களும் தெரியும்.

இந்தக் குட்டி முயலை அம்மாதான் கைவிட்டு விட்டதே. இது தானாகவே பிழைக்க வேண்டாமா? புதரை விட்டு வெளியே வந்தது. ஒரு செடியின் கிட்டப் போயிற்று. அதன் இளந் தளிரைக் கடித்துத் தின்னத் தொடங்கியது. முயலுக்கு நேர்த்தியான இருபத்தெட்டுப் பற்கள் ண்டு. அது தழையும் ல்லும் தின்னும்.

முயல் குட்டி இப்படித் ளிர் தின்றுகொண்டே ருந்தது. அப்போது
மற்கே ஒரு கவுதாரி விர்ரென்று
ரையிலிருந்து கிளம்பியது.

டாக், டாக், டாக், டாக்!

குட்டி முயல் கிழக்குப் பக்க
க ஓட்டம் பிடித்தது. அங்கே
ரு வான்கோழி ஒய்யாரமாக
ன்றது. உடனே திரும்பித்
ற்குப் பக்கமாய் ஓட்டம் பிடித்
முயல். அங்கே ஒரு வயல்
சலசலப்புடன் ஓடியது.
தற்கும் மறுபக்கம் திரும்பி
டந்தான். எலியைக் கண்
லும் முயலுக்கு அவ்வளவு
ம்.

ரண்டு பர்லாங்கு தூரம்
யிற்று. அங்கே வேறொரு
யின் தழையை மேய்ந்தது.
த, தன் இருப்பிடம் திரும்
து.

யல் குட்டி வளர்ந்தது.
முயலாயிற்று. கொஞ்ச
தில் இன்னொரு முயலைக்
து. இரண்டும் சிநேக மாயின. ஜோடியாகக் கணவனும் மனைவியுமாக வாழ்ந்தன.

இரண்டும் ஜோடியாகவே வெளியே போகும். ஜோடியாகவே புல்லும் தழையும் மேயும். ஜோடியாகவே பனிநீர் குடிக்கும்.

காட்டில் வெகு தூரம் வரைக்கும் இரண்டும் 'ஸர்வே' செய்து வைத்தன. தங்களுக்கென்று பல தடங்கள் வகுத்துக்கொண்டன. முயலின் சுவடு முயலுக்கு நன்றாய்த் தெரியும். போன சுவட்டிலேயே அது போகும். புதிய இடத்துக்குப் போக முயலுக்கு ரொம்பவும் பயம். புதிதாக எதைக் கண்டாலும் அது என்ன என்று நன்றாய் ஆராயும். அங்கே ஏதாவது அசைந்தால், போதும்; எடு ஓட்டம். சிட்டாய்ப் பறந்துவிடும்.

ஒரு நாள் இரண்டு முயலும் காட்டில் மேய்ந்துகொண் டிருந்தன. வேடர்கள் வந்துவிட்டார்

கள். வேட்டை நாய்களும் கூடவே வந்தன.

இந்த முயல்களை வேடர்கள் கண்டுவிட்டார்கள். நாய்களை இவற்றின்மேல் 'சூ பிடி' என்று உசும்பி விட்டார்கள். உடனே இவை அதி வேகமாய் ஓடின.

டாக், டாக், டாக், டாக்!

இவை கண்ணுக்குத் தெரியாத தூரம் ஓடிவிட்டன. முயல்களுக்கு எந்தத் தந்திரமும் தெரியாது; ஒளிந்து கொள்ளவும் தெரியாது; சண்டை போடவும் தெரியாது. ஓடத்தான் தெரியும். பாவம், மகா சாதுவான பிராணிகள்; பயந்த பிராணிகள்.

டாக், டாக், டாக், டாக்!
டாக், டாக், டாக், டாக்!

ஒரு முயல் ஒரு பக்கம் ஓடியது; இன்னொரு முயல் இன்னொரு பக்கம் ஓடியது.

நாய்கள் துரத்தின. அவை வேட்டை நாய்கள். அவைகளுக்கு மோப்பம் பிடிக்கத் தெரியும். முயலின் சுவட்டை மோந்து மோந்து பார்த்துக்கொண்டே துரத்தின.

பெண் முயல் போன இடமே தெரியவில்லை. ஆண் முயலை ஒரு வேட்டை நாய் நெருங்கிவிட்டது.

தொபக்கடீர்!

ஒரு கரணம் போட்டது முயல்.

டாக், டாக், டாக், டாக்!

ஓட்டமான ஓட்டம்!

முயல் கரணம் போட்ட இடத்தில், சுவடு சரியாக இல்லை. நாய் மோந்து மோந்து பார்த்தது. ஒன்றும் புரியவில்லை. தயங்கித் தயங்கி நின்றது. வந்த சுவட்டிலேயே திரும்பிவிட்டது.

'செத்தேன், பிழைத்தேன்' என்று முயல் தன் புதருக்குப் போய்ச் சேர்ந்தது.

எவ்வளவு தூரம் போனாலும் தன் இருப்பிடத்துக்கு முயல் திரும்பிவிடும்.

'பெண் முயல் வரும், வரு...' என்று ஆண் முயல் வெகு நேர... காத்தது. அது வரவில்லை 'ஐயோ! அது என்ன ஆயிற்றோ! வேட்டை நாய் பிடித்ததோ! வேடர் கொன்றூர்களோ! எப்படிக் கதறியதோ!' என்று வருத்தப்பட்டது. முயல் எப்போதும் கத்தாது. யாராவது பிடித்தால் கத்தும்; காயம் பட்டால் கத்தும். அப்போது நம் வீட்டுக் குழந்தை மாதிரி அலறும். இதனால்தான் ஆண் முயல் இப்படியெல்லாம் நினைத்தது.

பல நாள் வரைக்கும் பெண் முயல் வரவேயில்லை. ஆண் முயல் ரொம்ப ரொம்ப வருந்தியது. என்ன செய்வது?

ஒரு நாள் சந்திரன் நன்றாய் நிலா வீசிக்கொண்டிருந்தது. சந்திரனில்கூட ஒரு முயல் இருப்பதாகச் சொல்லுவார்களே! அந்தத் தெய்வ முயலுக்கு இரக்கம் வந்ததோ என்னவோ; பெண் முயலும் திரும்பி வந்துசேர்ந்தது.

ஆண் முயல் களிப்படைந்தது.

"அன்று என்ன நடந்தது?" என்று பெண் முயலைக் கேட்டது.

"அன்றா? அந்தப் பொல்லாத வேட்டை நாய் என்னமாய்த் துரத்தியது! நான் ஓடினேன். தடம் தவறிவிட்டது. எப்படியோ தப்பிப் பிழைத்தேன். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. அதில் வசித்தேன், எப்போதும் உன் ஞாபகந்தான். வழி தெரியாததால் வரவில்லை. இன்று என்னை ஒரு ராஜாளி துரத்தியது. குடல் தெறிக்க ஓடினேன். தற்செயலாய் நம் சுவட்டைக் கண்டேன். திரும்பிவிட்டேன்" என்றது பெண் முயல். இரண்டுக்கும் ஆனந்தம் பொங்கியது. துள்ளிக் குதித்தன. கரணங்கள் போட்டன. 'டான்ஸ்' ஆடின. சந்தோஷமாய் வாழ்ந்தன.

எதற்கு இது உண்டு?

(ஆனால் பிராணி வர்க்கத்தைச் சேர்ந்ததல்ல)

1. ———— குடுமி உண்டு.
2. ———— கொண்டை உண்டு.
3. ———— தலை உண்டு.
4. ———— கண் உண்டு.
5. ———— காது உண்டு.
6. ———— மூக்கு உண்டு.
7. ———— வாய் உண்டு.
8. ———— பல் உண்டு.
9. ———— நாக்கு உண்டு.
10. ———— கழுத்து உண்டு.
11. ———— உடல் உண்டு.
12. ———— முதுகு உண்டு.
13. ———— இடுப்பு உண்டு.
14. ———— கை உண்டு.
15. ———— கால் உண்டு.
16. ———— வால் உண்டு.

விடை:—1. தேங்காய்க்கு, 2. பம்பரத்துக்கு, 3. ஆணிக்கு, 4. சல்லடைக்கு, சிப்பலுக்கு, 5. ஊசிக்கு, கோப்பைக்கு, 6. சங்குக்கு, விளக்குக்கு, 7. உலைக்கு, 8. சீப்புக்கு, 9. மணிக்கு, 10. செம்புக்கு, 11. புடைவைக்கு, 12. குரிச்சிக்கு, 13. உடுக்குக்கு, 14. சட்டைக்கு, குரிச்சிக்கு, 15. கதைக்கு, 16. கரண்டிக்கு, மேஜைக்கு.



இது ஒரு நிலத்தின் பிளான். இதில் நாலு வீடுகளும் நாலு புளிய மரங்களும் நாலு தென்ன மரங்களும் இருக்கின்றன. இவற்றை நாலு பேருக்குச் சமமாகப் பங்கிட வேண்டும். ஒவ்வொருவனுக்குப் அவன் பங்கு நிலத்தில் ஒரு வீடும் ஒரு புளியமரமும் ஒரு தென்ன மரமும் இருக்கவேண்டும். இதை எப்படிப் பங்கிடலாம்? முயன்று பாருங்கள். அடுத்த பக்கத்தில் விடை இருக்கிறது.

R. பாலசுப்பிரமணியம், கருகம்பனே.



* * *

அன்புள்ள ஆசிரியர் அவர்களே!

மூன்று கூபன்களைப் பூர்த்தி செய்து அனுப்பினால் தங்க பாட்ஜ் கொடுப்பீர்களாமே. இதோ அனுப்பியிருக்கிறேன். நிரந்தர அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டு தங்க பாட்ஜும் அனுப்புவீர்களென்று நம்புகிறேன்.

K. மணலிங்கம், கடலூர், N. T.

[தங்க பாட்ஜ் கொடுக்கப்போவதாக யார் சொன்னது? எல்லாருக்கும் கிடைக்கப்போகிற தங்கமான எனாமல் பாட்ஜ் இதோ இரண்டு வாரத்துக்குள் உனக்கும் வரும்!—ஆ-ர்.]

* * * *

கண்ணன் ஆசிரியருக்கு வணக்கம், காமிராப் பரிசுப் போட்டிக்கு ஒரு கதை அனுப்பியிருக்கிறேன். இதை நானே சொந்தமாக, ... பத்திரிகையிலிருந்து பார்த்து எழுதியிருக்கிறேன். எனக்குக் காமிராப் பரிசு எப்பொழுது கிடைக்கும்?

பரிமளா, கோவை,

[நீயே சொந்தமாகச் சிறந்த கதை எழுதும்போது நிச்சயம் கிடைக்கும்!—ஆ-ர்.]

* * *

குகுகுகுகுகுகுகுகுக் கோவிந்தன் அஅஅஅஅஅஅஅஅக்கு ஆசைப்பட்டானாம்!—புரிகிறதா?

கு-10-உம், அ-10-உம் சேர்ந்து, குப்பத்துக் கோவிந்தன் அப்பத்துக்கு ஆசைப்பட்டானாம்!—சரிதானா?

K. திருநாவுக்கரசு, வேலைமாநகர்.

* * * *

தாங்கள் எனக்குப் பரிசாக அனுப்பிய பொம்மை நாய் வந்து சேர்ந்தது.. அப்பப்பா! அது வந்ததிலிருந்து அடிக்கும் லூட்டி கொஞ்ச நஞ்சமில்லை. நான் வாலை ஆட்டச் சொன்னாலும் தலையை ஆட்டச் சொன்னாலும் ஆட்டுகிறது. இவ்வளவு நூதனமான சிறந்த பரிசை அளித்ததற்காக மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜி. ஜயராமன், தாம்பரம். (பேனாப் பரிசப் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற குழந்தை.)



(முதல் பக்கத்தில் இருக்கும் கட்டத்துக்கு விடை)

காரட் தித்திப்புக் கோசும்பரி

நாலு காரட்; 8 டீஸ்பூன் சர்க்கரை, எலுமிச்சம்பழம் ஒன்று. காரட்டை அலம்பி, கொப்பரைத் துருவலாக ஒரு கிண்ணத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் சர்க்கரையைப் போட்டு எலுமிச்சம்பழத்தையும் பிழிந்து நன்ருகக் கலக்கிவிட்டால் போதும். ருசியாக இருக்கும்.

M. R. சாந்தி, கோயம்புத்தூர்.

*   *   *   *

உங்கள் வயது

செட்	நெ.	1
8	27	46
9	28	47
10	29	56
11	30	57
12	31	58
13	40	59
14	41	60
15	42	61
24	43	62
25	44	63
26	45	

செட்	நெ.	2
1	23	45
3	25	47
5	27	49
7	29	51
9	31	53
11	33	55
13	35	57
15	37	59
17	39	61
19	41	63
21	43	

செட்	நெ.	3
16	27	54
17	28	55
18	29	56
19	30	57
20	31	58
21	48	59
22	49	60
23	50	61
24	51	62
25	52	63
26	53	

செட்	நெ.	4
4	23	46
5	28	47
6	29	52
7	30	53
12	31	54
13	36	55
14	37	60
15	38	61
20	39	62
21	44	63
22	45	

செட்	நெ.	5
32	42	53
33	43	54
34	44	55
35	45	56
36	46	57
37	47	58
38	48	59
39	49	60
40	50	61
41	51	62
	52	63

செட்	நெ.	6
2	23	46
3	26	47
6	27	50
7	30	51
10	31	54
11	34	55
14	35	58
15	38	59
18	39	62
19	42	63
22	43	

ஒருவருடைய வயது எந்த எந்தச் செட்டுகளில் இருக்கிறது என்று கேளுங்கள். அந்த அந்தச் செட்டுகளின் முதல் எண்களைக் கூட்டினுல் அவருடைய வயதைச் சொல்லிவிடலாம். (உ-ம்) என் வயது 1, 2, 4, 6 செட்டுகளில் இருக்கிறது. முதல் எண்கள் முறையே 8, 1, 4, 2. மொத்தம் கூட்டினுல் 15. அதுதான் என் வயது.

இந்திரா (I-3)

கண்ணன் மாதப் பத்திரிகையாக இருப்பதால் மறுமாதம் பத்திரிகை வரும் வரையில் ரொம்பக் கஷ்டப்பட்டுக் காத்திருக்க வேண்டியிருக்கிறது; ஆகையால் கண்ணனைப் பக்ஷப் பதிப்பாக்கினுல் ஆயிரக்கணக்கான இளம் உள்ளங்கள் சந்தோஷத்தினுல் குளிரும் என்பது திண்ணம்.

கு. பழனிதாஸ், விக்கிரமசிங்கபுரம்.

[உங்கள் பக்ஷத்தைக் கண்டு 'கண்ணன்' மனம் ரொம்பவும் குளிர்கிறது. ஆ-ர்.]

ஃ ஃ ஃ

உல்லாசப் பிரயாணம்

நாங்கள் இந்த லீவிலே திருக்குற்ருலத்துக்குப் போனேம். அங்கே இப்போது நல்ல ஸீஸன். D. P. T. பங்களாவில் தங்கினேம். அடடடடா! ரொம்ப ஜோரான இடம்! எனக்கு அதைப் பார்த்ததும் எந்த இடம் ஞாபகம் வந்தது தெரியுமா? உங்களால் சொல்லவே முடியாது. நானே சொல்லிவிடுகிறேன். 116° வெயில் கொளுத்தும் விஜயவாடாதான்! அங்கே இருக்கிற பையன்களெல்லாம் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்! நினைத்தாலே எனக்கு ரொம்ப வருத்தமாய் இருந்தது. இங்கே மலையிலிருந்து உருக்கிவிட்ட வெள்ளி மாதிரி அருவி ஜலம் கொட்டுவது எப்படிப்பட்ட காட்சி! நீராவியில் நிற்பது மாதிரி பாலத்துக்கு வந்தாலே ஜிலுஜிலு என்று என் சட்டையெல்லாம் நனைந்து போகும். ஒரு நாளைக்கு மூன்று தடவை நாலு தடவை நாங்கள் போய் அருவி ஸ்நானம் செய்துவிட்டு வருவோம். அங்கிருந்து ஐந்தருவிக்குப் போனேம். மலையும் மரங்களும் பசுமையும் குளுமையும் உள்ள இப்படிப்பட்ட இடம் நம் தென்னுட்டில் இருக்கிறதே! எனக்கு எவ்வளவு பெருமையாய் இருக்கிறது, தெரியுமா? கண்ணன் கழக அங்கத்தினர்கள் எல்லாருமே இந்த ஸீஸன்போது இங்கே கூடினுல் எவ்வளவு ஜோராய் இருக்கும்!

வி. அநஸூயா (A.9) சென்னை.

ஃ ஃ ஃ

அதிசயக் கூட்டல்

1 முதல் 100, 200, 300, 1000 அல்லது எவ்வளவாக இருந்தாலும் சரிதான், ஒரே நிமிஷத்தில் அதன் கூட்டுத் தொகையைச் சொல்ல முடியும். (உ-ம்) 1 முதல் 100 வரையில்; 100+1 என்று ஒன்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பிறகு 100-இல் பாதியால் 101-ஐப் பெருக்க வேண்டும். அவ்வளவுதான். 5050 தான் அதன் விடை. 1 முதல் 119 வரை வேண்டும் என்றுல் அடுத்த இரட்டைப் படை நம்பர் 120-இல் பாதியையும் 119ஐயும் பெருக்கினுல் போதும். அதுதான் விடை.

பி. எஸ். நாராயணன், வயது 14, சென்னை 4.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இதற்குள் 2000 பேருக்குமேல் நிரந்தர அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டார்கள்.

உங்களுக்கு இதில் உடனே சேரவேண்டுமென்று ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவு தான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பலாம். அவர்களுக்கு இனமாக எனமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். கூபன்களை அனுப்புபவர்கள் தனியாகக் கடிதம் எழுதவேண்டியதில்லை. கண்ணனில் அவ்வப்போது வெளியாகும் பரிசுப் போட்டிகளில் கண்ணன் கழக அங்கத்தினர்கள்மட்டுமே கலந்துகொள்ளலாம். மற்றவர்கள் இதில் கலந்துகொள்ள முடியாது. அடுத்த இதழில் 'வியூ மாஸ்டர்' பரிசுக் கதைப் போட்டியின் விவரங்கள் வெளியாகும்.

Reg. No. M. 5542.

உங்களுக்காகவே ஒரு புத்தகம்!

ராஜாவும் குருவியும்

கதைகளில் இந்தக் காலத்துக் கதை வேண்டும், அந்தக் காலத்துக் கதை வேண்டாம் என்று யாரும் சொல்லமாட்டார்கள்! எந்தக் காலத்துக் கதையாக இருந்தாலும் அது நன்ருக இருக்கவேண்டும். அந்தக் காலத்தில் மட்டும் பிராணிகளும் பட்சிகளும் பேசிக் கொண்டா இருந்தன? யுத்தியைப் புகுத்தி அறிவைப் பெருக்க அதெல்லாம் ஒரு வழி.

அதே முறையில் குழந்தைகளுக்கு என்று தயாரானது இந்த அருமையான புத்தகம்.

மணி மணியான ஏழு கதைகள் இதில் இருக்கின்றன. பெரிய எழுத்தில் வர்ணப் படங்களுடன் 'ஜம்'மென்று இருக்கிறது புத்தகம். பழைய நரியையும் பழைய நாயையும் பழைய குருவியையும் பல உருவங்களில் படித்த குழந்தைகளுக்கு அந்தப் பிராணிகள் இங்கே வேறுமாதிரியில் நடப்பதைக் காண வேடிக்கையாக இருக்கும்; புதுமையாகவும் இருக்கும். சுவாரஸ்யத்துக்குக் கேட்பானேன்?

அந்தக் காலத்துச் 'சோமசன்மா'வின் பஞ்ச தந்திரக் கதைகளை ராஜகுமாரர்கள் படித்தார்கள். இந்தக் காலத்துச் 'சோமசன்மா'வின் கதைகளை நாமும் படிக்கத்தான் வேண்டும்; ரஸிக்கவும் வேண்டும். கை நிறைந்த பரிசு!

விலை 8 அணா

நீங்கள் கண்ணன் கழக அங்கத்தினர்களா?

அப்படியானுல் உங்களுக்குக் கட்டாயம் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை